Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 பங்குனி-22 04-04-2005 திங்கட்கிழமை ஓசை 45



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-11478)

# சந்திரிகா அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பில் மாபெரும் பேரணி

## ஐக்கிய தேசியக்கட்சி நாளை நடத்துகின்றது

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு எதிராக நாளை கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நடத்தவுள்ளது.இந்தப் பேரணிக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதம் அடைந்திருப்பதைக் கண்டித்தும், நாட்டின் அபிவிருத்தி உரிய முறையில் முன்கொண்டு செல்லப்படாததைக் கண்டித்தும், சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய பணிகள் அரசாங்கத்தால் இதுவரை மேற்கொள்ளப்படாததைக் கண்டித்தும் இந்த மாபெரும் பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமிப் பதற்றம்

(கொழும்பு)

கொழும்புப் பகுதியில் நேற்று மாலை சுனாமிப்பதற்றம் ஏற்பட்டுள்ளது. பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெகிவளையை அண்டிய கடலோரப் பகுதிகளில் கடலில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பினால் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டது. இந்தக் கடற்கொந்தளிப்பு சுனாமியோ, சூறாவளியோ அல்ல என இலங்கை வானிலை ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. (32)

## அமைச்சரவையில் விரைவில் மாற்றம்; சிறிலங்கா சனாதிபதி முடிவெடுப்பு!

(கொழும்பு)

சிறிலங்காவின் அமைச்சரவையில் மீண்டும் பல மாற்றங்களைச் செய்ய சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடிவெடுத்துள்ளார் என சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இந்த மாற்றத்தின் படி பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் கீழ் இயங்கும் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு சனாதிபதியின் மிக நெருங்கிய அமைச்சர் ஒருவருக்கு வழங்கப்படவுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கு அமைச்சுப் பதவி ஒன்றை வழங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. துறைமுகம்,சிவில் விமான போக்குவரத்து அமைச்சை சனாதிபதி பொறுப்பேற்பதுடன் அமைச்சர்களான தினேஸ் குணவர்தனா,ஏ.எச்.எம்பௌசி,அத்தாவுட

(12ஆம் பக்கம் பார்க்க)

## இரத்மலான விமானப் படைத்தளத்திற்கு சனாதிபதி சந்திரிகா நேற்று விஜயம்

(கொழும்பு)

இரத்மலான விமானப்படைத் தளத்திற்கு சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.படையினருக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்வதற்காகவே அவர் இந்த விஜயத்தினை மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் சனாதிபதி கலந்து கொள்வதனை முன்னிட்டு பாதுகாப்பு ஏற்பாடாக நேற்று யாழ். குடாநாட்டுக்கான விமான சேவைகள் அனைத்தும் இடை நிறுத்தப்பட்டிருந்தன. படையினருக்கான இந்த விசேட நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சனாதிபதி அங்கு சிறப்புரை யாற்றியுள்ளார். (27, 32)

## இலங்கையில் சீரற்ற காலநிலை; கிழக்கில் பத்தாயிரம் குடும்பம் பாதிப்பு

இலங்கையில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பெய்துவரும் அடைமழையினால், ஆழிப்பேரலை அனர்த்தத்தால் இடம்பெயர்ந்து தற்காலிக இருப்பிடங்களில் தங்கியுள்ள சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு சிரமங்களையும் இன்னல்களையும் எதிர்நோக்கி வருவதாக கிழக்கு மாகாண செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் முதல் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக தற்போது தற்காலிக கொட்டில்களிலும் கூடாரங்களிலும் தங்கியுள்ள ஆழிப்பேரலையால் இடம்பெயர்ந்தோர் மற்றுமொரு பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே இவர்களுக்கான தற்காலிக குடியிருப்பு வசதிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரத்தை பாதுகாத்ததே ஒரு வருடத்தில் மிச்சம் – ரணில்

(கொழும்பு)

சிறிலங்காவில் ஆட்சி அமைத்த கூட்டமைப்பு அரசாங்கம் அதிகாரத்தை பாதுகாக்கவே கடந்த ஒரு வருட காலத்தில் முயற்சி செய்தது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதி எதனையும் அரசாங்கம் நிறைவு செய்யவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அனுராதபுரத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கூட்டமைப்பு அரசாங்கத்திலுள்ளவர்கள் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகிறார்களே தவிர நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் கவனம் எடுக்கவில்லை. மக்கள் விடுதலை முன்னணி

(12ஆம் பக்கம் பார்க்க)

## மக்களுக்கான அபிவிருத்திப்பணிகள் முழுமனதுடன் நடைபெறவேண்டும்

*திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம்*

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான அபிவிருத்தி வேலைகளை அதிகாரிகள் முழு மனதுடன் மேற்கொள்ளவேண்டும். இதன் போது எந்தவொரு பிரதேசமும் பாதிக்கப்படக்கூடாது என திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதிகேணல். சொர்ணம் தெரிவித்துள்ளார்.

கடற்கரைச் சேனையில் திருகோணமலை அரச அதிகாரிகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்த காலத்தில் தமிழ் பிரதேசங்கள் முழுமை

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி பொதுக்கட்டமைப்பு விரைவில் அமைக்கப்படும்!

*—— நோர்வே சமாதானத்தூதுவர் எரிக் சூல் ஹெய்ம்*

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் விரைவில் சுனாமி தொடர்பிலான பொதுக்கட்டமைப்பு அமைக்கப்படும் என நோர்வே சமாதான தூதுவர் எரிக் சூல் ஹெய்ம் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் நோர்வேத் தரப்பு முனைப்புகளை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில் அவர் இந்த விடயத்தை வெளிப்படுத்தியுள்ளார். நோர்வே நாடு இலங்கைக்கு சமாதானப் படைவீரர்களை அனுப்புமா? எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்துள்ள அவர் அவ்வாறான திட்டம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமிப் புனரமைப்பு ஒப்பந்தம் புலிகளுடன் செய்வேன் – சந்திரிகா

(கொழும்பு)

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்டுள்ள வட-கிழக்கு பிரதேசங்களில் புனர்நிர்மாண வேலைகளுக்கான திட்டத்திற்கு விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளப் போவதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தற்பொழுது தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப்புலிகளின் குழுவினர் அயர்லாந்தில் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். அவர்கள் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னதாக திரும்பி வருகின்றனர். அவர்கள் வந்த பின் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்படும். இதன் பின்னர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
பதிவு இல:— எம் /06

# பதவி வெற்றிடங்கள் (தற்காலிகம்)

**01) கணக்காளர் :- குறி. இல. 104/10 எண்ணிக்கை 01**
**சம்பளத்திட்டம் 4750 - 100X10 - 110X10 - 6850**
(சுற்று நிருபம் 31/99படி)

**கல்வித் தகைமை:-**

அ. 11ஆவது சம்பளத்திட்டத்தில் அமைந்த கணக்குப்பதிவினர், கணக்கு எழுதுனர் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

12ஆவது சம்பளத்திட்டத்தில் அமைந்த கணக்குப் பதிவினர், கணக்கு எழுதுனர் அல்லது கணக்காய்வு எழுதுனர் பதவியில் 6 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ ஐக்கியராச்சியத்தின் கணக்குப் பதிவினர் நிறுவனத்தில் இறுதிப் பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்குப் பகுதியில் அல்லது கணக்காய்வுப் பகுதியில் மேற்பார்வை மட்டப்பதவியில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஐக்கிய ராச்சியத்தின் கணக்குப் பதிவினர் நிறுவனத்தில் இடைநிலைப் பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்குப் பகுதியில் அல்லது கணக்காய்வுப் பகுதியில் மேற்பார்வை மட்டப்பதவியிலான 4வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் (உயர்தரம்) பரீட்சையில் சித்தி அல்லது க.பொ.த.உயர்தரத்தில் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனத்தில் கணக்கியல் அல்லது கணக்காய்வுப் பகுதியில் மேற்பார்வை மட்டப் பதவியிலான 4வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**02) அங்கத்தவர் தொடர்பு பயிற்சி (கல்வி) உத்தியோகத்தா :- குறி. இல. 201/13 எண்ணிக்கை 01**
**சம்பளத்திட்டம் 4000 - 75X10 - 80X10 - 5550**
(சுற்று நிருபம் 31/99 படி)

**கல்வித் தகைமை:-**

க.பொ.த.(சாதாரண) தரத்தில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த.உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப்பத்திரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்

அல்லது

14ஆவது சம்பளத்திட்டத்தில் கூட்டுறவுப் பணியாளர் பதவியில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம் இருத்தல் வேண்டும்.

**03) அலுவலக வேலை உதவியாளர் :- குறி. இல. 317/16 எண்ணிக்கை 01**
**சம்பளத்திட்டம் 3250 - 60X10 - 65X10 - 4500**
(சுற்று நிருபம் 31/99 படி)

**கல்வித் தகைமை:-**

அ. 17ஆவது சம்பளத்திட்டத்தில் ஒருவருடத்திற்குக் குறையாத அனுபவமும் ஐந்தாம் வகுப்புச் சித்தியும்.

அல்லது

ஆ.
* 8ஆம் வகுப்பு சித்தி *
* வயதெல்லை 18 - 45 விண்ணப்ப முடிவு திகதி 15.04.2005
* விண்ணப்பங்கள் யாவும் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட்டவேண்டும். விண்ணப்பத்துடன், கல்வித்தகைமை சான்றிதழ், வதிவிட உறுதிப்படுத்தல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் என்பவற்றின்
* நிழல் பிரதி இணைக்கப்படவேண்டும்.

தற்போது கூட்டுறவுச் சேவையிலுள்ள பணியாளர்களின் வயதெல்லைஏற்புடையதாகாது என்பதுடன், விண்ணப்பப் படிவங்கள் சம்பந்தப்பட்ட சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

முக்கியகுறிப்பு:- கணனிப்பயிற்சி பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**முகவரி:**
**தலைவர்,**
**புதுக்குடியிருப்பு ப.தெ.வ.அ.கூ. சங்கம்,**
**8ஆம் வட்டாரம், மந்துவில், புதுக்குடியிருப்பு,**
**முல்லைத்தீவு.**

(5961)

# நீங்காத நினைவலைகள்

**07 ஆம் ஆண்டு** **06 ஆம் ஆண்டு**





**அந்தோனிப்பிள்ளை றிச்சேட்**

**வீரவேங்கை முடியழகி றிச்சேட் ஜீவசுலோசனா ஜீன்**

30.03.1956 தோற்றம் 24.11.1980
04.04.1998 மறைவு 03.03.1999

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த்திகழ்ந்து எமக்கு அல்லும் பகலும் உழைத்து நல்வழி காட்டிய அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

வண்ணாங்கேணி,
பளை.

தகவல்:- றிச்சேட் றஞ்சனா.
குடும்பத்தினர்

(5967)

# முல்லை – செயலக நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி கடவுச்சீட்டு வழங்கல்,இறப்பு - பிறப்புச்சான்றிதழ் வழங்கல், மோட்டார் வாகன அனுமதிப்பத்திரங்கள் வழங்கல், தேசிய அடையாள அட்டை வழங்கல் போன்ற சேவைகளுக்கென நடமாடும் சேவைகள் நடைபெறவுள்ளதாக முல்லை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சண்முகலிங்கம் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டைபெறவருவோர் காணமற்போன அடையாள அட்டையின் இலக்கம் தெரிந்தால் அதையும் கொண்டுவருமாறு கூறிய அவர். இந்நடமாடும் சேவை முல்லைத்தீவு,புதுக்குடியிருப்பு, முள்ளியவளை ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்தார். (20)

# பெ.அ.புனர்வாழ்வு நிறுவனம் 3 இலட். ரூபா சுயமுயற்சிக்கடன்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினரால் யு.என்.டி.பி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் வட்டக்கச்சி, கிளிநொச்சி பகுதியிலுள்ள 19 பயனாளிகளுக்கு சுயதொழில் முயற்சிக்கு இரண்டு இலட்சத்து 85 ஆயிரம் ரூபா மீளளிப்புக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.

வட்டக்கச்சி முன்பள்ளியில் வைத்து நிறுவனப் பணிப்பாளர் மா.வினோ தலைமையில் கடந்தவாரம் விவசாய செய்கை,வியாபாரம்,மாடுவளர்ப்பு போன்வற்றிற்கென மேற்படி கடனுதவி வழங்கப்பட்டது.

வட்டக்கச்சிப் பிரதேச இணைப்பாளர் ம.கொலஸ்ரின் மாலினியின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் கிளி.கிழக்கு புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் திருமதி.றஞ்சி கலந்து கொண்டு தொழில்களின் முக்கியத்துவம் குறித்து கருத்துரை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. சோ)

# சுனாமிக்கொடுப்பனவு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களிற்கு மக்கள் வங்கி மூலமான கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் எதிர்வரும் சனிக்கிழமை செல்வபுரம்,முல்லைத்தீவு தெற்கு(கரைச்சிக்குடியிப்பு) அளம்பில் வடக்கு,தெற்கு ஆகிய கிராம மக்களிற்கும் ஞாயிற்றுக்கிழமை சிலாவத்தை தெற்கு சிலாவத்தை, தீர்த்தக்கரை ஆகிய கிராமங்களிலுள்ள மக்களிற்கும் வழங்கப்படவுள்ளதாக மக்கள் வங்கி முகாமையாளர் தெரிவித்தார். இதனடிப்படையில் ஒரு அங்கத்தவருக்கு 2500 ரூபாவும் ஒன்றுக்கு மேற்பட்டவர்களிற்கு 5000 ரூபாவும் வழங்கப்பட்டுவருகிறது. இதைப்பெறவருவோர் தேசிய அடையாள அட்டையையோ அல்லது தற்காலிக அடையாள அட்டையையோ கொண்டு வருமாறு தெரிவித்ததோடு வங்கிப்புத்தகத்தில் பெயர் உள்ளவர்களே வருகைதர வேண்டும் என்று மேலும் தெரிவித்துள்ளார். (20)

# மாணவருக்கு வேண்டுகோள்

(முல்லைத்தீவு)

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் சுனாமியினால் இடம் பெயர்ந்த முல்லைத்தீவு மகாவித்தியாலத்தில் கல்வி கற்று வந்த மாணவர் களிற்கு முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் செ.அல்பிரட் அன்பான வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

தற்போது ஏனைய பாடசாலைகளில் கல்வி கற்றுக்கொண்டிருக்கும் முல்லைத் தீவு மகாவித்தியால மாணவர்கள் தற்போது முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்புப் பிரதான வீதியில் முல்லைத்தீவு மகாவித்தியாலயம் இயங்குவதால் அனைவரையும் மகாவித்தியாலத்திற்கு கல்வி கற்க வருமாறு கேட்டுக் கொள்கின்றார். (20)

# இந்தியாவிலிருந்து திரும்பியவரிடம் போதைப்பொருள் கண்டுபிடிப்பு

(மன்னார்)

இந்தியாவிலிருநது நாடுதிரும்பிய அகதிகளில் 44 வயதுடைய நபர் ஒருவரிடமிருந்து போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த நபர் ஒருவரை தலை மன்னார் பொலிசார் சோதனையிட்டபோது 50 கிராம் போதைப் பொருள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மேற்படி நபர் நேற்று மன்னார் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். அவரை மன்னார் நீதிபதி எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விட்டுள்ளார்.

## வரிவிளம்பரம்

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோக் கொப்பி,லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும்,பிள்ளையார் பொத்தகசாலை கண்டிவீதி, கிளிநொச்சி T.P.021-2285750

# நாட்டில் பரவலாக மழை

(கொழும்பு)

நாட்டில் தற்போது பரவலாக மழை பெய்து வருவதாகவும் இந்நேரங்களில் மின்சார உபகரணங்களை பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும். காலநிலை அவதான மையம் தெரிவித்துள்ளது.

மாலை வேளைகளில் பரவாலக மழை பெய்து வருகின்றது. மேற்கு மற்றும் வடமத்திய மாகாண பகுதிகளிலும் பரவலாக மழை பெய்யக் கூடும் என அந்த மையம் மேலும் தெரிவித்துள்ளது.

# கத்தோலிக்கர்களின் தலைவர் போப்பின் மறைவுக்கு உலகத் தலைவர்கள் அனுதாபம்

## புதனன்று இறுதிச் சடங்குகள்; பல நாடுகளிலும் துக்கம் அனுஷ்டிப்பு



உலகம் முழுவதும் உள்ள 110 கோடி கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவர் போப் பாண்டவர் ஜோன் போல் நேற்று அதிகாலை நித்திய இளைப்பாறிக்கொண்டார்.

மூச்சுத்திணறல் காரணமாக ரோம் நகரிலுள்ள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த போப் பாண்டவருக்கு தொண்டையில் சத்திர சிகிச்சை நடந்தது. அதன் பிறகு வத்திக்கானிலுள்ள தனது மாளிகைக்குத் திரும்பிய பிறகும் அவரது உடல் நிலை தேறவில்லை.

சிறுநீர்க் குழாயில் கிருமிகள் பரவி தொற்று ஏற்பட்டது. அதிக காய்ச்சலும் ஏற்பட்டது. இந்த நிலையில் கடந்த வெள்ளியன்று அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து அவரது உடல் நிலையில் மேலும் பின்னடைவு ஏற்பட்டது.

மரணத்தின் பிடியில் இருந்த அவரைக் காப்பாற்ற வைத்தியர்கள் கடந்த இரண்டு நாட்களாகப் போராடினார்கள். அவருக்காக உலகம் முழுவதும் உள்ள தேவாலயங்களில் சிறப்புப் பிரார்த்தனையும் நடந்தது.

ஆனாலும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. நேற்று அதிகாலை அவர் உயிர் பிரிந்தது.

மரணம் அடைந்த போப் பாண்டவரின் வயது 84. உலகம் முழுவதுமுள்ள கிறிஸ்தவர்களை போப் பாண்டவரின் மரணம் துயரத்தில் ஆழ்த்திவிட்டது.

வத்திக்கான் நகர தேவாலயத்திலும் மற்றும் பல்வேறு பகுதிகளிலுமுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் போப் பாண்டவரின் மரணத்தைக் குறிக்கும் வகையில் துக்க மணி அடிக்கப்பட்டது.

பீட்டர்ஸ் தேவாலயத்தில் ஏற்கனவே ஆயிரக்கணக்கானவர்கள் போப்பாண்டவரின் நிலை பற்றித் தெரிந்து கொள்ளக் கூடி நின்றனர்.அவர்கள் கண்ணீர்விட்டு அழுதனர்.

போப்பாண்டவரின் உடல் பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக வத்திக்கான் நகரிலுள்ள அவரது மாளிகையில் வைக்கப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கானவர்கள் கண்ணீர் மல்க அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

போப்பாண்டவர் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து வத்திக்கான் நகர் நிர்வாகப் பொறுப்பு தற்காலிகமாக வேறு ஒரு கர்தினால் எட்வர்டோ மார்ட்டினஸ் சோமாலோவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து போப் ஜோன்போலின் இறுதிச் சடங்குகளுக்கான ஏற்பாடுகளும் தொடங்கியது. இறுதிச் சடங்கு நடக்கும் திகதி உட்பட பல விடயங்கள் குறித்து அவர் கர்தினால்களுடன் ஆலோசனை நடத்தி வருகின்றார்.

வழக்கமாக போப்பாண்டவர் மரணம் அடைந்ததும். நான்கு அல்லது ஐந்து நாட்களில் இறுதிச் சடங்கு மற்றும் உடல் அடக்க நிகழ்ச்சி நடைபெறுவது வழக்கம். போப் ஜோன்போலின் இறுதிச் சடங்கு வரும் புதன்கிழமை நடைபெறுகிறது.

புதிய போப்பாண்டவர் 15அல்லது 20 நாட்களுக்குள் தேர்ந்து எடுக்கப்படவேண்டும் என்பதால் இறுதிச்சடங்கு ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இறுதிச்சடங்கு நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பல்வேறு நாடுகளில் இருந்தும் உலகத்தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள் ரோம் நகரில் குவிகிறார்கள்.

ரோம் நகரிலுள்ள விடுதிகள் அனைத்தும் இப்போது நிரம்பி வழிகிறது. பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டுள்ளன. ரோம் நகரில் அவரது இறுதிச்சடங்கு நிகழ்ச்சிகளை நடத்தவும் ஏராளமானவர்கள் பார்க்கவும் விசேஷமேடை அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கிடையே உடல் அடக்க நிகழ்ச்சியை போப் பாண்டவரின் சொந்த நாடான போலந்தில் நடத்தவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

போப்பாண்டவர் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து இத்தாலியில் ஒன்பது நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. இத்தாலியில் நடைபெற இருந்த கால்பந்தாட்டம் உட்பட அனைத்து நிகழ்ச்சிகளும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

சென் பீட்டர்ஸ் ஆலயத்தின் அருகே உள்ள வெண்கலக் கதவுகள் மூடப்பட்டு விட்டன. அடுத்த போப் பதவி ஏற்ற பிறகுதான் இந்தக் கதவுகள் திறக்கப்படும்.



போப்பின் மறைவால் உலகமே சோகமயமான காட்சி

## போப்பின் கடைசி வார்த்தை

போப்பாண்டவர் இரண்டாம் ஜோன் போல் உயிர் பிரிவதற்கு முன கூறிய கடைசிவார்த்தை "ஆமென்" கடவுள் கிருபையால் எல்லாம் ஆகட்டும் என்று அவர் தனது உணர்வை வெளிப்படுத்தினார் என்று இத்தாலிய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. போப் மரணமடைந்ததை குறிக்கும் வகையில் அவரது அறையில் விளக்குகள் அணைக்கப்பட்டன.

# யாருக்கும் அஞ்சாத புத்திசாலித் தலைவரை உலகம் இழந்து விட்டது - ஜோர்ஜ் புஷ்



போப் இரண்டாம் ஜோன் போல் மறைவுக்கு பல்வேறு நாடுகளின் தலைவர்கள் இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் தனது அனுதாபச் செய்தியில் "யாருக்கும் அஞ்சாத புத்திசாலித் தலைவர் போப் ஜோன் போல் கத்தோலிக்க ஆலயம் தனது மேய்ப்பரை இழந்து விட்டது. மனித விடுதலைக்காகப் போராடியவரை உலகம் இழந்து விட்டது. கடவுள் உண்மையான தொண்டனை தனது வீட்டுக்கு அழைத்துக் கொண்டு விட்டார். காலங்களை கடந்த கதாநாயகனாக திகழ்ந்த ஜோன்போலின் இறுதிச் சடங்குகள் முடியும் வரை அமெரிக்காவின் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்க விடப்படும். அவரது இறுதிச் சடங்குகளில் அமெரிக்க நாட்டின் பிரதிநிதி கலந்து கொள்வார்.

இவ்வாறு இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான் வெளியிட்டுள்ள அனுதாப செய்தியில் "போப்பாண்டவர் மனிதர்களிடையே அமைதியை வளர்க்கப் பாடுபட்டவர். போரினால் அனைவருக்கும் தோல்வி என்ற கருத்தில் ஈடுபாடு கொண்டவர். ஐ.நா.வின் தீவிர ஆதரவாளர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜேர்மன் நாட்டின் அதிபர் ஜெரார்டு ஷிரோடர், "எங்களது நாடு இரும்பு திரையால் பிரிக்கப்பட்டிருந்தது. போப் ஜோன்போலின் முயற்சியால் இது தகர்க்கப்பட்டு விட்டது" என்று இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



ஈராக்கில் அபுகிராய் சிறைச்சாலை மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் பலியான இராணுவத்தினரின் தலைக்கவசத்தை வைத்திருக்கும் இளைஞன் ஒருவன். (சம்பவத்தில் 44 துருப்பினரும், 12 கைதிகளும் காயமடைந்துள்ளனர்.)

# இந்தோனேசியாவில் இதுவரை 700 முறை நில அதிர்வுகள்

(ஜகார்த்தா)

கடந்த திங்கட்கிழமை 8.7 அளவுக்கு ஏற்பட்ட நிலநடுக்கத்தை தொடர்ந்து இந்தோனேஷியாவில் இதுவரை 700 முறை நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நியாஸ் தீவில் சனிக்கிழமை அதிகாலை இந்திய நேரப்படி 1.02-க்கு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவு மானியில் 5.8 அலகாக பதிவானது. சனிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட நிலநடுக்கம் இந்தோனேஷியாவின் பல்வேறு நகரங்களிலும் மேற்கு சுமாத்திரா மாகாணத்திலும் உணரப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் இதுவரை 418 பேர் உயிரிழந்ததாக இந்தோனேஷியா தெரிவித்துள்ளது. ஆனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 1300 ஆக இருக்கும் என்று ஐ.நா கூறுகிறது.

கடந்த ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்டகடும் நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் இந்தோனேஷியாவில் மட்டும் இரண்டு லட்சத்து 20 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். என்று கூறப்படுகிறது. அப்போது 9.3 அலகு அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டது.

# பட்டினியால் வாடும் நியாஸ்தீவு மக்கள்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவில் பூகம்பம் தாக்கிய நியாஸ் தீவில் சாலைகளும், பாலங்களும் பழுதுபட்டுள்ளதால் நிவாரணப் பொருட்கள் விரைவில் சென்று சேரவில்லை. இதனால் இப்பகுதி மக்கள் பசியால் வாடி வருகின்றனர்.

இந்தோனேஷியாவில் கடந்த 28ஆம்திகதி நியாஸ் தீவில் பூகம்பம் ஏற்பட்டதில் இரண்டாயிரம் பேர் பலியாகினர். இத்தீவிலுள்ள பெரும்பாலான வீடுகள் தரைமட்டமாகி விட்டன. சாலைகளில் பிளவு ஏற்பட்டு பெரிய பள்ளங்கள் காணப்படுகின்றன். இந்தத் தீவை இணைக்கும் பாலங்கள் பூகம்பத்தால் சேதமடைந்து விட்டன. எனவே மற்றப் பகுதிகளிலிருந்து இந்தத் தீவுக்கு நிவாரணப் பொருட்களை விநியோகம் செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இங்கு மழை பெய்து கொண்டிருப்பதால் உலங்குவானூர்திகள் மற்றும் விமானம் மூலம் உணவு பொட்டலங்களை விநியோகிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. உணவு உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் கிடைக்காததால் பூகம்பத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட குணாங்சிதோலி பகுதி மக்கள் பட்டினியால் வாடி வருகின்றனர்.



தெற்கு ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் முற்றுகைக் குள்ளான கட்டடம் (இதன் போது ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.)

# சிறைச்சாலைக்குள் புகுந்து தாக்குதல் ஈராக்கில் ஆறு பேர் உயிரிழப்பு

(பாக்தாத்)

ஈராக்தலைநகர் பக்தாத்தில் அமைந்துள்ள சிறைச்சாலை ஒன்றின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் ஆறுபேர் பலியாகியுள்ளனர்.

ஈராக்கின் பாக்தாத் நகரில் அபுகாகிராய் சிறைச்சாலை உள்ளது.

இங்கு மூவாயிரம் பேர் அடைக்கப்பட்டிருக்கிறார்கள் இந்தச் சிறையில் அமெரிக்கக் கூட்டுப்படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இங்கு வந்த அறுபது தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் சிறையை முற்றுகையிட்டனர். முதலில் இரண்டு கார் வெடிகுண்டு மூலம் அதிரடித் தாக்குதல் நடத்தினார்கள் அதைத் தொடர்ந்து, ராக்கெட் வெடிகுண்டு வீசியும், கைக் குண்டுவீசியும் தாக்குதல் நடத்தினார்கள். இதனால் சிறை முழுவதும் கரும்புகை ஏற்பட்டது. இதைப்பயன்படுத்தித் தீவிரவாதிகள் சிறைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினார்கள், உடனடியாக பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டி ருந்தவர்கள் திருப்பித் தாக்கினார்கள்.

இருதரப்பினருக்குமிடையே நாற்பது நிமிடம் சண்டை நடந்தது. இதில் ஆறு பேர் கொல்லப்பட்டனர். இருபது அமெரிக்க வீரர்கள், பன்னிரண்டு கைதிகள் படுகாயம் அடைந்தனர்.

# கிழக்குப் பல்கலையில் அடுத்த ஆண்டு மருத்துவபீடம் ஆரம்பிக்க நடவடிக்கை

## -பட்டமளிப்பு விழாவில் வேந்தர் அறிவிப்பு

(மட்டக்களப்பு)

**கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அடுத்த ஆண்டு முதல் மருத்துவ பீடம் செயற்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.**

நேற்று முன்தினம் நடைபெற்ற கிழக்குப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உரைநிகழ்த்திய பல்கலைக்கழகவேந்தர் பேராசிரியர் ரீ.வரகுணம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஐம்பது மாணவர்கள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ள மருத்துவ பீடத்தில் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்படிப்பினை நிறைவு செய்த 316 மாணவர்களுக்கு நேற்று முன்தினம் பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பட்டமளிப்பு நிகழ்வில் இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் சூசன் பிளன்கற் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மேலும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதினொராவது பட்டமளிப்பு விழாவின்போது மூத்த தமிழ் எழுத்தாளர் வ.ஆ.இராசரத்தினம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக வேந்தர் பி.வரகுணம் முன்னிலையில் பல் கலைக் கழக மண்டபத்தில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. கலை-187, வர்த்தக முகாமைத்துவம்-123, கலைகலாச்சாரம்-63, விவசாயம்-17, விஞ்ஞானம்-26 என 316 மாணவர்களுக்குப் பட்டங்கள் வழஙகப்பட்டன. (32)

## யாழ்.பல்கலை விவசாய பீடம் அறிவியல் நகரில் அமைக்க ஏற்பாடு

(விசுவமடு)

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம் கிளிநொச்சி அறிவியல் நகர்ப்பகுதியில் 175 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கின்றது.

இதற்கான கட்டட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கவிருப்பதாகவும் இதற்கான அனுமதிகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட நிக்கொட் பணிப்பாளர் கே.பார்த்தீபன் தெரிவித்துள்ளார். (46)

## -ஆழிப்பேரலை அனர்த்தத்தில்-

## பாதிக்கப்பட்ட முஸ்லிம் குடும்பங்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உதவி

(திருமலை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் திருகோணமலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 120 முஸ்லிம் குடும்பங்களுக்கு கூடாரங்கள் வழங்கப்பட்டன.

திருகோணமலை ஜமாலியாவைச் சேர்ந்த இவர்களுக்கு திருகோணமலை புனர்வாழ்வுக் கழக முஸ்லிம் பிரிவின் தலைவர் சாகுல் ஹமீட் இவற்றை வழங்கினார். ஆழிப்பேரலையால் ஜமாலியா பகுதியைச் சேர்ந்த 137 முஸ்லிம் குடும்பங்கள் இடப்பெயர்வுக்குள்ளாகி விளையாட்டு மைதானங்களில் தங்கி வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இவர்களில் 20 பேர் மட்டுமே கூடார வசதி கொண்ட வீடமைப்புப் பெற்றுள்ளனர். மற்றோர் அனைவரும் திறந்த வெளியிலேயே வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இதையடுத்து இம்மக்களுக்கு தாற்காலிக கூடாரங்களை அமைத்துக் கொள்வதற்கான பொருட்களை புனர்வாழ்வுக்கழகம் அளித்துள்ளது.

## காணிப் பிணக்குகளைத் தீர்க்க கலந்துரையாடுமாறு அறிவிப்பு

(முல்லை)

கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவில் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட அரசகாணிகளில் அல்லது பொதுமக்களால் 15.06.1995ஆம் ஆண்டுக்கு முன் அத்துமீறிப்பிடிக்கப்பட்டிருக்கும் அரச காணிகளில் பிணக்குகள் இருப்பின் தன்னை தனது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடுமாறு கரைதுறைப்பற்று உதவி அரசஅதிபர் அ.சோதிநாதன அறிவித்துள்ளாா.

மேலும் காணி ஆவணங்கள் பெறப்படாமை, காணிமாற்றம், காணி பிரிவிடுதல், எல்லைப்பிரச்சினை, பாதைப்பிரச்சினை காணிசம்பந்தமான ஏனைய பிரச்சினைகள் இருந்தால் அந்தப்பகுதிக் கிராமஅலுவலர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை இலவசமாகப் பெற்று விண்ணப்பங்களுடன் விரிவான கடிதங்களையும் இணைத்து உதவிஅரசஅதிபர் செயலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (20)

## குப்பி விளக்கால் குடிசையில் தீப்பிடித்தது எரிகாயங்களுக்குள்ளான வயோதிபர் மரணம்!

(அலுவலக செய்தியாளர்)

குடிசை தீப்பிடித்ததில் அதனுள் உறக்கத்தில் இருந்த வயோதிபர் ஒருவர் தீக்காயங்களுக்குள்ளாகிய நிலையில் கிளி.மாவட்ட வைத்திய சாலைக்கு எடுத்து வரப்பட்டு, அங்கு அவசர சிகிச்சை மேற்கொள்ளப் பெற்ற பொழுதிலும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் மரணமானார்.

நேற்று முன்தினம் அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

பூநகரி வாடியடியில் தனியாக வசித்துவந்த மேற்படி நபர் சம்பவ தினம் குடிசையில் குப்பிவிளக்கினை வைத்துவிட்டு நித்திரையிலிருந்த வேளை, விளக்குத்தட்டுப் பட்டதன் விளைவாக குடிசை தீப்பிடித்துள்ள தாகவும் உடனடியாக அருகிருந்த உறவினர்கள் பலத்த எரிகாயங்களுக்குள்ளான அவரை கிளி. மாவட்ட வைத் தியசாலைக்கு எடுத்துவந்து சிகிச்சை மேற்கொள்ளப்பெற்ற பொழுதிலும் சிகிச்சை பலனளிக்காத நிலை யில் வைத்தியசாலையில் அவர் மரணமானதாகவும் தெரியவந்துள்ளது. பூநகரி வாடியடியைச் சேர்ந்த 66 வயதுடைய செ.யோசெப் என்பவரே மரணமானவராவார்

கிளி. மாவட்ட வைத்திய அதிகாரி சடலப்பரிசோதனையினை மேற்கொண்டதைத் தொடர்ந்து கிளி.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே.வி.கே. திருலோகமூர்த்தி விபத்து மரணமெனத் தீர்ப்பு வழங்கினார். (சோ)

## மாங்குளத்தில் சிறப்புற நடைபெற்ற மாதாந்த வீரமுரசு கலைநிகழ்வு

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறையினரின் அனுசரணையுடன் மாங்குளம் பிரதேச அரசியல்துறையின் ஒழுங்குபடுத்தலில் மாதாந்த வீரமுரசு கலைநிகழ்வு கடந்த வியாழனன்று சிறப்புற இடம்பெற்றுள்ளது.

மாங்குளம் பிரதேசத்தில் பெரிய புளியங்குளம் அ.த.க.பாடசாலை மைதானத்தில் அலங்கரிக்கப்பட்ட மேடையில் பள்ளி அதிபர் நித்திய கலா தலைமையில் இரவு 7.30 மணிக்கு நிகழ்வு ஆரம்பமானது. ஆரம்ப நிகழ் வாக பொதுச்சுடரினை அப்பகுதிக் கிராமசேவையாளர் ஏற்றிவைத்த தையடுத்து முதற்கரும்புலி மாவீரர் கப்டன் மில்லரின் திருவுருவப்படத் திற்கு மாங்குளம் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.நாகமைந்தன் ஈகச்சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்ததைத் தொடர்ந்து அப்பகுதி மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்குப் பெற்றோர் உறவினர் ஈகச்சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவித்தனர்.

தலைமை யுரையினைத் தொடர்ந்து கரிப்பட்ட முறிப்பு மகாவித்தியாலய உபஅதிபர் பஞ்சலிங்கம் கருத்துரை நிகழ்த்தி னார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகள் ஆரம்பமாகிப் பெண்களின் முயற்சியால் கிடைத்த வெற்றி எனும் நாடகம், கவியரங்கம்,கவிதை, பாட்டு என்பன இடம்பெற்றன.நிகழ்வுக்கான சமகால சிறப்புக் கருத்துரையினை தமிழீழ விடுதலைப்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் செ.முகுந்தன் நிகழ்த்தினார்.

மேற்படி நிகழ்வில் பெருமளவான பொதுமக்கள், மாணவ மாணவிகள், போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஆ)

## பேருந்து சேவை பிற்பகல் வேண்டும்

பூநகரியிலிருந்து ஜெயபுரம், முழங்காவில் பேருந்து சேவை பிற்பகல் 5.30 மணிக்கு நடைபெற வேண்டுமென தமிழீழ போக்குவரத்துக் கழகத்தினை அரச, அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் கோருகின் றார்கள்.

ஜெயபுரத்தில் இயங்கிவந்த சகல திணைக்களங்களும் பூநகரி சென்றுள்ளதால் ஜெயபுரம்-முழங்காவிலில் இருப்போர் தமிழீழ போக்குவரத்துக் கழகப்பேருந்துகளில் கடமைக்குக் காலையில் செல்ல முடிகின்றது.

ஆனால், பிற்பகல 5.30 மணிக்கு கடமை முடிந்து வரமுடியாமல் கஷ்ரபபடு கின்றார்கள். பிற்பகல் சேவை நடை பெறுமாயின் மக்களும் இச்சேவை யினைப் பெறுவார்கள என்பதனையும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கல்

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரால் கேப்பாப் புலவு புலோக்குடியிருப்பிலுள்ள 16 பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வானது கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. அப் பகுதி கிராம அலுவலர் பாலகிருஸ்ணன், பிரதேச பொருண்மிய இணைப்பாளர் ஆ..றொபேட் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் சுரேஸ் ஆகியோர் கருத்துரைகள் வழங்கியதையடுத்து அப்பகுதியில் இனங் காணப்பட்ட 16 பயனாளிகளுக்கும் ஒவ்வொரு பயனாளிக்கு இரண்டு ஆடுகள் வீதம் 32 நல்லின ஆடுகள் வழங்கப்பட்டுள்ளதாக முள்ளியவளைப் பிரதேச த.பொ.மே. நிறுவன இணைப்பாளர் ஆ.றொபேட்தெரிவித்தார். (ஆ)

## விழி இதழ் வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதாரப்பணிமனையினரின் மாதாந்த வெளியீடான விழிமருத்துவ இதழ் 55 வெளிவந்துள்ளது.

சி.விபுலேந்திரன் எழுதிய "சுனாமியும் சுகவாழ்வும்" எனும் கட்டுரையும், சுகாதார சிறுகதை மற்றும் பல சுகாதாரச் செய்திகளைத் தாங்கி மேற்படி விழி இதழ் 55 வெளி வந்துள்ளது. (சோ)

## சிறுபோக நெற்செய்கை தீர்மானக் கூட்டம்

(முள்ளியவளை)

முள்ளியவளை கமநல சேவை அபிவிருத்தி திணைக்களத்திற்குட்பட்ட பகுதியில் சிறுபோக நெற்செய்கைக்கான தீர்மானக் கூட்டம் நடைபெற்று வருகின்றது.

இதுவரை நடைபெற்ற கூட்ட தீர்மானங்களின்படி காஞ்சுரமோட்டை பகுதியில் 26 ஏக்கரும் ஆராச்சியா முறிப்புக் குளத்தின் கீழ் 58 ஏக்கரும் கீச்சிக்குளத்தின் கீழ் 22 ஏக்கரும் நெற்செய்கை மேற்கொள்வதாகவும் நீராவிக் குளத்தின் கீழ் 20 ஏக்கில் நிலகடலை செய்கை பண்ணுவதாகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக கமநல சேவை அபிவிருத்தித் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி சு.இராசலட்சுமி தெரிவித்தார். (ஆ)

## வைத்தியசாலை முன்பாக தார்ப் பீப்பாக்கள் குவிப்பு

## -அகற்ற நடவடிக்கையில்லை

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையின் மகப்பேற்றுமனைக்கு முன்பான பிரதான வீதி ஓரத்தில் பெருமளவான தார்ப்பீப்பாக்கள் பறிக்கப்பட்டுள்ளதால் வைத்தியசாலைக்குச் செல்வோர் அவலப்படுவதுடன் வைத்தியசாலை முன்பகுதி வேறு திணைக்களம் போல் காட்சியளிக்கின்றது.

மேற்படி தார்ப்பீப்பாக்கள் பலமாதமாக அவ்விடத்தில் உள்ளதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளதுடன் இத் தார்ப்பீப்பாக்கள் வைத்தியசாலை மகப்பேற்று மனைக்கு முன்பாகவுள்ள வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினது என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

## அன்னை பூபதி நினைவாக சிரமதானப்பணி முன்னெடுப்பு

(புதுக்குடியிருப்பு)

தியாகி அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு முல்லை.மாவட்டத்தில் பர வலாக சிரமதானப்பணிகள் இடம்பெற்று வருகின்றன.அந்தவகையில் குமுழமுனைக் கிராமத்தில் மாவீரர் படிப்பக வளாகமும், ஆறுமுகத்தான் குளத்திற்கான வீதியும் சீர்செய்யப்பட்டது.

ஆறுமுகத்தான் குளத்திற்கான வீதியில் குமுழமுனைத்திட்ட மிடலும் அபிவிருத்தியும் என்ற அமைப்பினர் சிரமதானம் மேற்கொண்டனர். பாரிய [illegible] குழியுமாக இருந்த இவ்வீதி சிரமதானப்பணி மூலம் சீர்செய்யப்பட்டது. (08)

## அனிஞ்சியன்குளம் பகுதியில் கிராம தரிசிப்பு நிகழ்வு

(மல்லாவி)

அனிஞ்சியன்குளம் கிராமத்தில் "சமாதானமும் அபிவிருத்தியும்" எனும கலந்துரையாடல் நிகழ்வும், கிராம தரிசிப்பு நிகழ்வும் அனிஞ்சியன்குளம் தமிழ்க்கலவன்வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

முல்லை. மாவட்டப்பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் அனுசரணையுடன் கடந்த 31 ஆம் திகதி 2.30 மணிக்கும், பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்திட்ட இணைப்பாளர் சுகந்தா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கருத்துரைகளும் இடம்பெற்றன.

இதேவேளை கடந்த வெள்ளி, சனி ஆகிய நாட்களில் அனிஞ்சியன்குளம் கிராமத்தில் கிராம தரிசிப்பு நிகழ்வு இடம்பெற்றது. (24)

## சனசமூக நிலையம் திறப்பு விழா

இராமநாதபுரம் கலைச்சுடர் சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா இன்று நடைபெறவுள்ளது. இதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார். (சோ)

# இருவகையான யுத்தங்களை எமது தேசம் சந்தித்து நிற்கிறது

## - தே.எ.பேரவைச் செயலாளர் சொலமன் சூ சிறில்

(யாழ்ப்பாணம்)

**தமிழர் தாயக தேசம் இன்று இரு முனைகளில் இருவகையான யுத்தங்களைச் சந்தித்து நிற்கிறது. ஒன்று இராணுவ ரீதியிலான யுத்தம், மற்றது பொருளாதார ரீதியிலான யுத்தம். இராணுவ ரீதியிலான யுத்தத்தில் நாம் சர்வதேச மட்டத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றோம். பொருளாதார யுத்தத்தில் சற்று பின்னடைவிற்தான் நிற்கின்றோம். ஆனால் இந்த இரு முனைப் போராட்டங்களையும் நாம் வெற்றிகரமாக முன்னெடுத்தால்தான் எங்களது அரசியல் இலட்சியத்தை அடையமுடியும்.**

இவ்வாறு தென்னிந்தியத் திருச்சபையினால் நடாத்தப்படும் பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் யாழ்ப்பாண மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளரும் யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டறவுச் சங்கத்தின் தலைவருமான சொலமன் சூ சிறில் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது, இன்றும் நாம் உணவிற்கும் மற்றும் அதியாவசியத் தேவைகளுக்கும், சேவைகளுக்கும் தென்னிலங்கையையே நம்பி வாழ்கின்றோம். இந்த நிலமை மாற வேண்டும் அல்லது மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இதை முன்னுணர்ந்த காரணத்தினாலேயேதான் தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் மேதகு. கலாநிதி க.ஜெபநேசன் ஆண்டகை தனது மறைப்பணியுடன், சமூகப் பொதுப்பணியிலும் உழைத்து வருகின்றார். மேதகு கலாநிதி ஜெபநேசன் அவர்கள் தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை நேசித்தவர். அதன் உண்மைத் தன்மையையும், அதன் நியாயப்பாட்டையும் சர்வதேச மட்டத்திற்கு துணிவுடன் எடுத்துச்சென்றவர். என சொலமன் சூ.சிறல் மேலும் தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வு தென்னிந்தியத் திருச்சபையின் கொக்குவில் வளாகத்தில் முதல்வர் அருட்பணியாளர் இராஜகுமாரன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினர்களாகத் தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் மேதகு கலாநிதி ஜெபநேசன் திருமதி விமலா ஜெபநேசன் அம்மையாரும், ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி பங்குத்தந்தை அருட்பணியாளர் றோ.ஜேசுராஜா, இறையியல் கல்லூரி பேராசிரியர் அருட்பணியாளர் பென்சமீன், சொலமன் சூ சிறில், பயிற்சி ஆசிரியர், மாணவிகளின் முதல்வர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பயிற்சி பெற்ற பெண்களுக்கான சான்றிதழ்களை திருமதி விமலா ஜெபநேசன் அம்மையார் வழங்கியதுடன், பயிற்சிபெற்ற 250 இற்கு மேற்பட்ட பெண்களின் கைவண்மையில் உருவான கைப்பணி, மனையியல் பொருட்களின் காட்சி மண்டபத்தையும் திறந்துவைத்தார். கண்காட்சியை ஏராளமான மக்கள் பார்வையிட்டனர் .(33)

# மாணவரின் வாசிப்புப் பழக்கத்தை விருத்தி செய்ய ஆ.அ.வங்கி உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் இயங்கிவரும் கல்வி நிறுவனங்கள் பலவற்றில் பயின்று வரும் மாணவர்களிடையே வாசிப்புப்பழக்கத்தை விருத்திசெய்வதன்மூலம் மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உதவும் நடவடிக்கைகளில் ஆசிய அபிவிருத்தி வங்கி ஈடுபட்டு வருகிறது.

அந்தவகையில் யாழ்.குடாநாட்டில் இயங்கிவரும் பாடசாலைகள், தொழில்நுட்பக்கல்லூரி போன்ற கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களின் அறிவுவளர்ச்சிக்குத் தேவையான புத்தகங்களையும், சஞ்சிகைகளையும் ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கி வருகின்றது.

அத்துடன் இத்தகைய கல்விநிறுவனங்களின் நூலகங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளையும் ஆசிய அபிவிருத்தி வங்கியினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (33)

# பொலிசாரின் அனுசரணையுடன் கொக்குவிலில் கசிப்பு விற்பனை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து மயானத்திற்கு அருகில் பொலிசாரின் அனுசரணையுடன் மூன்று இடங்களில் கசிப்புக் காய்சப்பட்டு விற்கப்படுவதை உடனடியாகத் தடுக்க வேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள் ளனர்.

கசிப்புக் காயசி விற்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் பலமுறை நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்கள் என்றும் தொடர்ந்தும் இத்தொழிலில் இவர்கள் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கும் பிரதேசவாசிகள் இதனால் தாம் பாதிக்கப்படுவதாகவும் இப்பகுதியில் கசிப்புக் குடிப்போரால் வீண் பிரச்சினைகள் எழுவதாகவும் சம்மந்தப்பட்டவர்கள் இது குறித்துக் கடும் நடவடிக்கை எடுத்து, கட்டுப்படுத்தும்படியும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (28)

# துவிச்சக்கர வண்டிகளை மீளளிக்க சிறிலங்கா பொலிசார் மறுப்பு

யாழ்.நகரப்பகுதியில் அண்மையில் இடம்பெற்ற இராணுவ வாகன விபத்தொன்றில் பாடசாலை மாணவி ஒருவர் பலியானதன் எதிரொலியாக யாழ்.பல்கலைக்கழகத்தை அண்டிய பகுதிகளில் இடம்பெற்ற இராணுவத்தினருக்கு எதிரான போராட்டங்களைச் சாட்டாக வைத்து பல்கலைக் கழகத்துக்கு அண்மையிலுள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்துள் புகுந்த சிறிலங்காப் பொலிசாரால் கையகப்படுத்தப்பட்ட பத்துத் துவிச்சக்கர வண்டிகள் மற்றும் இரண்டு உந்துருளிகள் என்பவற்றை மீளளிக்கப் பொலிசார் மறுப்புத் தெரி வித்து வருகின்றனர்.

இது குறித்து இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் முறையிட்டும் பயனேதும் கிட்டவில்லை என மாணவர் பேரவையினர் தெரிவிக்கின்றனர்.

இந்தத் துவிச்சக்கரவண்டிகளும் உந்துருளிகளும் சம்பவ நேரத்தில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் கல்விசார் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாணவர்களதும், பேரவை உறுப்பினர்களுடையதும் என்பது குறிப்பிடத்தக்கது. (33)

# கெற்பெலி–ஆனையிறவு வீதியை புனரமைத்துத் தரக் கோரிக்கை

(தென்மராட்சி)

கடந்த காலப் போரினால் முற்றிலும் சிதைவடைந்து போயுள்ள கச்சாய் கெற்பெலி ஊடான ஆனையிறவு வீதியை அவசரகால அடிப்படையில் புனரமைத்துத் தரவேண்டும என கெற்பெலிக் கிராம அபிவிருத்திச் சங்கம் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது குறித்து மகஜர்களைக் கையளித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

இவ்வீதியால் பாடசாலை மாணவர்கள், உத்தியோகத்தர்கள், விவசாயிகள், மற்றும் சிற்றூர்தி சேவைகள் மிகவும் கஷ்ரத்தின் மத்தியிலேயே போக்குவரத்துக்களைச் செய்ய வேண்டியுள்ளது. கெற்பெலி, விடத்தற்பளை, உசன், பாலாவி,கச்சாய், தவசிகுளம், மிருசுவில், கிளாலியின் ஒரு பகுதி ஆகிய கிராமங்களில் உள்ள இரண்டாயிரத்திற்கும் அதிகமான மக்கள் இவ் வீதியைப் பயன்படுத்துவதாகவும் இம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது, (28)

## திடீர் விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் கள்ளின் விலை திடீரென வீழ்ச்சி கண்டுள்ளதாகப் பனை தென்னைவள அபிவிருத் திச் சங்கங்களின் கொத்தணி தெரிவித் திருக்கிறது. அந்த வகையில் இதுவரை காலமும் 24ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த ஒருபோத் தல்கள்ளு, தற்போது 20 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவருகிறது.

யாழ்.குடாநாட்டில் இடம்பெறும் கள்ளு உற்பத்திக்கு ஏற்றகேள்வி குறைந் திருக் கின்றமையே இதற்குக்காரணம் எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (33)

# தேவையான குடிநீரைப் பெறமுடியாதுள்ளது குழாய்நீர் விநியோகத்தை விஸ்த்தரிக்குக!

## யாழ்.கொட்டடி மக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரை அண்டியுள்ள கொட்டடிப் பகுதி வாழ்மக்கள் தமது அன்றாட தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்ளத் தேவையான குடி நீரைப் பெற்றுக் கொள்ள முடியாது பெரும் துன்பப்படுகின்றனர்.

மக்கள் நெருக்கடி மிகுந்த இப் பிரதேசத்திற்கான குடிநீர் யாழ். மாநகர சபையினரால் குழாய் மூலமாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது எனினும் இப்பகுதி வாழ்மக்களின் தொகைக்கு ஏற்ப போதியளவு குடி நீர்க்குழாய்கள் பொருத்தப்படவில்லை இதனால் குறிப்பிட்ட நேரத்துக்கு மட்டும் விநியோகம் செய்யப்படும். குடிநீரினைப் பெறுவதற்கு மக்கள் கொள்கலன்களுடன் குழாய்களுக்கு முன்பாக முண்டியடித்து வரிசையில் நிற்கும் பரிதாபநிலை காணப்படுகிறது.

குறிப்பிட்ட நேரத்திற்குள் மட்டுமே இக்குடிநீர் விநியோகம் இருப்பதால் சிலர் தமக்குத் தேவையான குடிநீரைப் பெறமுடியாது ஏமாற்றமடையும் சந்தர்ப்பங்களும் அதிகம் காணப்படுகிறது.

எனவே இப்பகுதி மக்கள் தொகைக்கு ஏற்ப குழாய் மூலமான குடிநீர் விநியோகத்தை விஸ்த்தரிப்பதுடன் குடிநீர் விநியோக நேர எல்லையை மேலும் சில மணி நேரங்களால் அதிகரிப்புச் செய்யுமாறும் கோரியுள்ளனர். (33)

# பாடசாலையின் அடிப்படைத் தேவையை நிறைவு செய்யக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து தரும்படி பாடசாலை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மிகவும் பின்தங்கிய பிரதேச வறிய மாணவர்களைக் கொண்ட இப்பாடசாலைக்கு ஒன்றுகூடல் மண்டபம் ஒன்றும், அலுவலக உபயோகத்திற்கும், மாணவர்களின் அவசர தேவைகளுக்குமான முச்சக்கர வண்டி ஒன்றும் வழங்க நடவடிக்கை எடுக்கும்படி பாடசாலை நிர்வாகம் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக தெரிவியவருகிறது. (28)

# யாழ். வெங்காயச் செய்கையாளர் குமிழ் அழுகல்நோயால் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அறுவடையின் பின்னர் வெங்காயத்திற்கு ஏற்படும் குமிழ் அழுகல்நோயின் தாக்கம் அதிகரித்திருப்பதாக விசாயத் திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர்.

யாழ். குடாநாட்டில் நிலவி வரும் சீரற்ற காலநிலையின், தாக்கங்களாலும், வெப்ப அதிகரிப்பினாலுமே இந்நோய் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அறுவடை செய்யப்பட்ட பின்னர் இந்நோயின் தாக்கம் ஏற்படுவதால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் போதியளவு வருவாயைப் பெறமுடியாத நிலையும் வெங்காயச் செய்கையாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. (33)

# தென்மராட்சியில் தனியார் காணிகளில் சட்டவிரோத மணல்அகழ்வு

## *-பொலிசார் அசமந்தம்; மக்கள் விசனம்*

(தென்மராட்சி)

யாழ்.தென்மராட்சியிலுள்ள மந்துவில் வடக்குப் பிரதேசத்தில் உள்ள தனியார் காணிகளிலிருந்து சட்டவிரோதமான முறையில் மண் அகழப்பட்டு வருகின்றது.

இப்பகுதியில் அண்மைக்காலமாகத் தொடர்ந்து இடம்பெற்றுவரும் மணல்அகழ்வுகளால் இங்குள்ள தனியார் காணிகள் பலவற்றிலும் பாரியளவு குழிகள் ஏற்பட்டுள்ளன.

தினமும் இப்பகுதியில் சட்டவிரோதமான மணல் அகழ்வு இடம்பெற்றுவருகின்ற போதும் சிறிலங்காப் பொலிசார் இதுகுறித்து நடவடிக்கை எடுக்காது அசமந்தப்போக்குடன் நடந்து கொள்வதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

# நகரில் கழிவுகளைச் சீராக அகற்ற வளம்பற்றாக் குறையாகவுள்ளது

## நல்லூர் பிரதேசசபை அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் பிரதேச சபையின் எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் கழிவகற்றும் நடவடிக்கைகளைச் சீரான முறையில் மேற்கொள்ள முடியாதுள்ளமைக்கு வளப் பற்றாக்குறையே காரணம் என நல்லூர் பிரதேசசபை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இப்பிரதேச சபை எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் பல இடங்களிலும் உள்ள வீதி ஓரங்களில் குப்பை கூழங்கள் தேங்கிக் கிடக்கின்றபோதும் அவற்றை அகற்றுவதற்கு வாகன வசதி இன்மை போன்ற வளக்குறைபாடுகளால் இக்கழிவுகளை அகற்ற முடிவதில்லை எனத்தெரிவிக்கப் படுகிறது.

இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (33)

**ஆழிப்பேரலை** அனர்த்தம் எங்கள் பகுதி களையும் காவுகொண்ட சமயம் அதில் சிக்கி எங்கள் நகரங்கள், கிராமங்கள், சிறிய ஊர்களெனக் கரையோரப் பகுதிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி பேரவலத்தைச் சந்தித்திருந்தன.

இந்தப் பேரவலத்தில் சிக்குண்டு பலர் உயிரிழந்திருந்தனர். பெருமளவானவர்கள் உயிர்தப்பினர். இந்த நிலையில் என்றுமே நிகழ்ந்திராத பாரிய மோசமான பாதிப்புக்குள்ளாகிப் போயிருந்த மக்களுக்கு உளரீதியான தாக்கங்கள் ஏற்பட்டிருந்தது.

உளரீதியாகப் பாரிய தாக்கமடைந்து வாழ்வின்மீது வெறுப்படைந்து விரக்தி நிலைக்குள் போயிருந்த இப்படியான மக்களை உளரீதியாக அணுகி அவர்களை விரக்தி நிலையில் இருந்து மீட்கவேண்டிய கடமை எங்களிடம்தான் இருந்தது.

எப்படி ஆறுதல் அளிப்பது என்ற தீர்மானத்தை எடுத்தோம்.

அந்தத் தீர்மானங்களை உளவளத்துணையில் நிபுணத்துவம் பெற்ற நீண்ட அனுபவம் வாய்ந்தவர்களின் ஆலோசனைக்குட்படுத்தினோம். அவர்களும் தனிநபர் உளவளத் துணை சாத்தியமற்றது குழு ரீதியான உளவளத்துணைதான் சாத்தியமானது என்ற கருத்தைச் சென்னார்கள்.

இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் எனக் குழு ரீதியாகப் பிரித்தோம். ஒரே பாதிப்பைச் சுமந்தவர்கள் ஒன்றாகக் கூடியிருந்து தங்கள் மனதில் பதிந்திருக்கின்ற துயரமான பதிவுகளை வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் உளவளத் துணையின் எடுகோளாக இருந்தது. அதற்காகப் பாதிக்கப்பட்டவர்களை மெதுவாக நகர்த்திக் கொண்டிருந்தோம்.

இப்படியாக ஒதுங்கிப்போய்க் கொண்டிருப்பவர்கள் பாரதூரமான, மிகவும் கடுமையான மனப்பாதிப்பிற்குள்ளாகி இருப்பவர்கள். அவர்களின் உளநலத்தை மாற்றாதுவிட்டால் விபரீதமான முடிவுகளுக்குச் சென்றுவிடுவார்கள் என்கின்ற நிலை தோன்றியது.

அதனால் அவர்களின் பாதையில் அவர்களுடன் கூடவே பயணித்து அவர்களின் மனதில் ஆழ வேரூன்றியிருக்கின்ற சுமையான பதிவுகளை அவர்களிடம் இருந்து பெற்று மனதில் தாக்கம் பற்றிய அழுத்தத்தைக் குறைவடையச் செய்து ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்துவதற்காக தனிநபர் உளவளத்துணையை வழங்கினோம்.

இந்தவகையில்தான் செயற்பட வேண்டும் என்கின்ற நிலை இருக்கவில்லை. சந்தர்ப்பத்திற்கு ஏற்றமாதிரி, பாதிக்கப்

வழிமுறைகள் எல்லாவற்றையும் தூக்கிவைத்துவிட்டுப் புதிய புதிய வித்தியாசமான வழி முறைகளைத் தேட வேண்டிய நிலைக்கு எங்களைத் தள்ளிவிட்டது என்பதையும் கூறத்தான் வேண்டும்.

இந்தப் பேரனர்த்தத்தில் சிக்கிப் பலர் இறந்து போய்விட்டார்கள். ஆனால் அதிலிருந்து மீண்டவர்கள் உளரீதியாகப் பாதிப்படைந்து போய்விடக்கூடாது. அதில் இருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் உளவள ரீதியில் மேம்பாடடைந்து சுனாமி ஏற்படுத்திய வலுவான மனக்காயங்கள் ஆற்றப்பட வேண்டும் என்பதற்காக பாதிக்கப்பட்டு சோர்வடைந்து போயிருந்த ஒவ்வொருவரது மனதில் இருந்த துயரமான பதிவுகளை அகற்றுவதற்காகக் கடுமையாகப் போராடினோம்.



**நீண்டகால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உளவளஆலோசனையை வழங்குவது போல ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளவள ஆலோசனையை வழங்க முடியாமல் போய்விட்டது. பல ஆண்டு காலமாக நாங்கள் பின்பற்றிய நடைமுறைகள்அனைத்தையும் தூக்கி எறிய வேண்டிய நிலைக்கு சுனாமி எங்களையும் தாக்கி இருந்தது. புதிய வழிமுறைகளைப் புகுத்தி அதற்கமைவாகத்தான் பிரச்சினைகளை அணுகினோம். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரின் மனங்களுக்குள்ளும் ஊடுருவி அதனுள் நிறைந்திருக்கின்ற சுமைகளைக் களைவதுதான் எங்கள் பணியாக இருந்தது. அதற்காக நாங்கள் அடைந்த கஷ்ரங்கள் அதிகம் என சுனாமி அலைகளில் சிக்கி உயிர் தப்பிய நிலையில், உளரீதியான பாதிப்புக்குள்ளாகாத வகையில் உளவளத்துணை வழங்கி பாதிப்படைந்த மனங்களுக்குள் இருந்த சுமைகளைக் களையும் பணியில் செயற்பட்டிருந்த அன்னை இல்ல உளவளத்துணை உளவியல் அறிவூட்டும் நிறுவன இயக்குநர் வண பிதா. றெஜினோல்ட் அவர்கள் தெரிவித்தார். அவர் பகிர்ந்தவை உங்களுக்காக வருகிறது.**

பகுதி-44

# புதிய அணுகுமுறைகளைத் தேடவேண்டிய நெருக்கடிக்குள் சுனாமி எங்களைத் தள்ளியது

அதனால் சம்பவம் நடந்து நான்கு நாட்களின் பின்னர் உளவளத்துணையாளர்களைப் பாதிக்கப்பட்ட மக்களுடன் சேர்ந்து அவர்களின் நிலை என்ன? எந்தளவு பாதிப்புக்களை தங்கள் மனங்களில் சுமந்துகொண்டிருக்கின்றார்கள்? என்பதைக் கணிப்பிடுவதே எங்களின் முதற்கட்ட வேலையாக இருந்தது.

ஏற்கனவே போரின் கொடுமையான பாதிப்புக்களுக்குள் சிக்கி உளரீதியாகப் பாதிப்படைந்து போய் இருந்த மக்களுக்கு உளரீதியான மேம்பாட்டை ஏற்படுத்துவதில்தான் நாங்கள் கடந்த காலங்களில் ஈடுபட்டிருந்தோம்.

இயற்கை அழிவு பற்றியும், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் எவ் வழிகளில் உளநலம் குன்றியிருப்பார்கள் போன்ற விடயங்களும் எங்களுக்கு முன்னர் அறிந்திராத முற்றிலும் புதியதானதாகத்தான் இருந்தது.


அதனால் நாங்கள் பாதிப்புக்களின் தன்மையை தாக்கங்களின் ஆழத்தை அளவிடுவதில்தான் முதலில் இறங்கினோம். அதற்காக மூன்று நாட்கள் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது.

இப்படியே மூன்று நாட்களாக தனித் தனியாகவும், பிரிவு பிரிவாகவும் உளவளத்

## முல்லையில் ஆழிப்பேரலைகள் நடத்திய கோரத்தாண்டவம்

ணையாளர்கள் தேடிக் கண்டறிந்த சுமையான விடயங்கள் அனைத்தையும் கூடிப்பேசி ஆழிப்பேரலையில் சிக்கித் தவித்துக் ாண்டிருக்கின்ற மக்களுக்கு உளரீதியாக

அதேபோல தமது மனதில் பதிந்திருக்கின்ற சுமையான பதிவுகளை வார்த்தைகளால் வெளியிட முடியாத நிலையில் இருந்த சிறுபிள்ளைகளின் உளவளத்தை மேம்படுத்துவதற்காக இன்னொரு வகையில்



விளையாட்டு உபகரணங்களை வழங்கி அவர்களின் மனச் சுமைக்கு ஓய்வளித்து மகிழ்வான பதிவுகளை உட்புகுத்துவதற்கான வகையில் எங்கள் பணியைச் செய்துகொண்டிருந்தோம்.

நாங்கள் இப்படியான பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சிலர் எங்களை விட்டு ஒதுங்கிப்போய் தனிமையில் தங்கள் பொழுதைக் கழித்துக்கொண்டிருந்தனர்.

பட்டவர்களின் தன்மையைப் பொறுத்துப் பல வழிகளிலும் செயற்பட்டோம். ஒவ் வொரு வேளைக்கும் ஒவ்வொருவகையில எங்களது அணுகு முறைகளை மாற்றிக்கொள்ள வேண்டிய நிலை உருவானது.

இதுவரை காலமும் யுத்த நெருக்கடிகளில் சிக்கித் தவித்த மக்களுக்கான உளவள ஆலோசனைகளை வழங்கி வந்த எங்களுக்கு இயற்கை அனர்த்தம் தந்த பாடம் உண்மையில் வித்தியாசமானது. இதுவரை காலமும் நாங்கள் பின்பற்றிவந்த வழிமுறைகள்,உத்திகள் அனைத்தையுமே மாற்றவேண்டிய நிலை எழுந்தது. முற்றிலும் வித்தியாசமான அனுபவங்களாக இருந்தது.

நீண்ட காலமாக நாங்கள் கையாண்டு வந்த உளவளத்தை மேம்படுத்தும் செயற்பாடுகளை அதாவது நீண்ட யுத்த நெருக்கடிகளுக்குள் நாம் மேற்கொண்டு வந்த வழிமுறைகள் அனைத்தையும் முற்றிலுமாகச் சாய்த்து விட்டது இந்தச்சுனாமி.

எத்தனை காலமாக நாங்கள் கையாண்ட

பாதிக்கப்பட்டிருந்த அத்தனை பேரின் மனதுக்குள்ளும் ஆழமாக ஊடுருவிப்போய் அவர்களின் சுமையை மெதுமெதுவாகக் களைந்தோம். இதற்காக நாம் அடைந்த துன்பங்களும், துயரங்களும் ஏராளம். எங்கள் துன்பங்களுக்கு மருந்தாக இருந்தது, பாதிப்படைந்து போயிருந்தவர்களின் உளரீதியான மாற்றம்தான்.

உளவள ஆலோசனை வழங்குவதில் நாங்கள் அதிக சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்த குழுவாக ஆண்களும், சிறுவர்களுமாகத்தான் இருந்தனர். ஆண்கள் தமது பிள்ளைகளை, மனைவிமாரை தமது கைப்பிடியில் இருந்தே காப்பாற்ற முடியாமல் கொடிய அலைக்குப் பறிகொடுத்திருந்தார்கள். அதனால் அந்தத் தாக்கம் அவர்களை ஆழமாகப் பாதித்திருந்தது. சிறுவர்களின் நடைமுறைகளை வைத்தே இவர்கள் எத்தகைய பாதிப்புக்குள்ளாகி இருக்கிறார்கள் என்பதை அறிய வேண்டியதாக இருந்தது. இவை சற்றுக்கடினமாகத்தான் இருந்தது.

**அ.லோகீசன்**

பெண்களைப் பொறுத்தவரையில் அவர்கள் இயல்பாகவே கதைக்கின்ற சுபாவம் உடையவர்கள். அதனால் அவர்கள் தமக்கு இருக்கின்ற வேதனைகளை எங்களின் உளவளத்துணையாளர்களுடன் பகிர்ந்தார்கள். அதனால் விரைவாக அவர்களுக்கு எங்களால் பாதிப்பில் இருந்து ஆறுதல் கொடுக்க முடிந்தது என்றார் வணபிதா. றெஜினோல்ட் அவர்கள்.

உளவளத்துணை வழங்குவதில் ஏற்பட்ட நெருக்கடிகள் பற்றியும் அவற்றை எப்படிச் சீர்செய்தோம் என்பன பற்றி பாதர் றெஜினோல்ட் அவர்கள் பகிர்ந்த விடயங்கள் அடுத்தபகுதியையும் நிரப்பும்.

(தொடரும்)

## 24.

☞ அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் வசிக்கும் பிரபல இந்தியடாக்டர் ராஜேஷ்சின் மகன் ஜெயந்த் தனது தாயாரான கிரணை கத்தியால் குத்திக் கொலை செய்துள்ளார்.

☞ பாகிஸ்தானின் கிழக்கு மாகாணமான பஞ்சாப் மாகாணத்திலுள்ள மீதோன் கோட்நகரின் மத்தியிலுள்ள ஆற்றில் 50 பயணிகளை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளானதில் 20 பேர் பலி.

☞ இந்தியாவின், வடகிழக்கு மாநிலமான நாகலாந்தில் இரு கிளர்ச்சிவாதக் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஏழு கிளர்ச்சிவாதிகள் உயிரிழந்தனர்.

☞ ஆப்கானிஸ்தானில் தலிபான் கிளர்ச்சி வாதிகளுக்கெதிராக அமெரிக்கப் படையினர் நடத்திய துப்பாக்கித் தாக்குதலில் கிளர்ச்சிவாதிகளும்;பொதுமக்களுமாக ஐந்து பேர் உயிரிழந்தனர்.


☞ துருக்கியின் தென்கிழக்குப் பகுதியான பிங்கொல் மாகாணத்தில் கார்லோவியா பகுதியில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. இது ரிச்டர் அளவு கோலில் 5.5 புள்ளியாகப் பதிவாகியுள்ளது.

☞ ஈராக் தலைநகர் பாக்தாத்துக்கு 115 கிலோமீற்றர் மேற்கிலுள்ள ரமாடியில் தற்கொலைப்படையைச் சேர்ந்த ஒருவர் வெடிகுண்டு நிரப்பப்பட்ட வாகனத்துடன் சென்று மோதியதில் 11 பொலிஸ் கமாண்டோக்கள் பலி.



## 25.

☞ ஈராக் ரமாடிநகர் சோதனைச் சாவடியில் ஈராக் ககாமாண்டோப் பொலிசார் ஒரு காரை வழிமறித்து நிறுத்தமுற்பட்டபோது அது வெடித்துச் சிதறியதில் 11பொலிசார் உடல் சிதறிப் பலி;பலர் படுகாயம்.



☞ ஆபிரிக்க நாடான அங்கோலாவில் மார்பேர்க் எனும் வைரஸ் காரணமாக 98 பேர் பலி.

☞ நாகலாந்து மற்றும் மத்திய பிரதேசத்தில் இரவு 7.05 மணியளவில் பூகம்பம் தாக்கியது. நாகலாந்து மாநிலத்தில் இந்தியா-மியான்மர் எல்லைப் பகுதியில் இப்பூகம்பம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.2 புள்ளியாகப் பதிவானது.

☞ அந்தமான் தீவில் நிலநடுக்கம் ஏற்பட்டதால் மக்கள் பதறியடித்துப் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினார்கள்.

## 26.

☞ லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் கிறிஸ்தவர்கள் நிறைந்து வாழும் கைத்தொழிற்பேட்டையருகே நிகழ்ந்த குண்டுவெடிப்பில் பலர் காயமடைந்ததுடன் இரண்டு இந்தியப் பிரஜைகள் பலி கட்டடங்கள் பலவும் சேதமடைந்தன.



☞ சீனா நிறைவேற்றிய சட்ட மூலத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தாய்வானில் மாபெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது இந்த ஆர்ப்பாட்டம் 10 இடங்களில் ஆரம்பமாகி தாய்வான் சனாதிபதி மாளிகை முன் முடிவடைந்தது.

☞ கொழும்புத் துறைமுகத்திலிருந்து எக்ஸ்பிரஸ் கர்வேலி கப்பல் 498 சரக்குப் பெட்டிகளை ஏற்றிக்கொண்டு தூத்துக்குடித் துறைமுகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போது கப்பல்தூத்துக்குடித் துறைமுகத் திலிருந்து 35 கடல் மைலுக்கு அப்பால் வரும்போது திடீரெனத் தீப்பிடித்தது.

☞ பிரிட்டனின் முன்னாள் பிரதமர் ஜேம்ஸ்கலகன் 93 ஆவது வயதில் காலமானார்.

## 27.

☞ கிர்கிஸ்தானில் புதிய ஆட்சிக்கு ஆதரவளித்து ஒஷ்சதுக்கத்தில் இராணுவத் தினரும் பொதுமக்களும் பேரணி நடத்தினர்.



☞ ஈராக் கர்பலா நகரில் ஈராக் பொலிசாரும், அமெரிக்கப் படையினரும் இணைந்து தீவிர தேடுதல் நடத்தினர். இதில் தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் 130 பேரைப் பொலிசார் கைது செய்தனர்.



☞ உத்தரப்பிரதேச மாநிலம் ஹபிகான்ஜ் பகுதியில் ஹோலி பிரார்த்தனையின் போது இடம்பெற்ற கைகலப்பில் மூவர்பலி ;மேலும் பல இடங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் ஏராளமானோர் படுகாய மடைந்தனர்.

## 27.

☞ ஈராக்கில் கடந்தமாதம்கடத்தப்பட்ட ஈராக் உள்துறை அமைச்சர் கேணல் ரியாத்அலி தீவிரவாதிகளால் கொலை.

☞ தாய்லாந்தின் தென்பகுதியில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதியில் நராத்திவாட் மாகாணத்தில் பொலிசார் ரோந்து வண்டியில் சென்று கொண்டிருந்தபோது தீவிரவாதிகள் குண்டுகளை வெடிக்கச் செய்ததில் 12 பொலிசார் காயம்.

☞ தென்கொரிய போக்குவரத்து மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் "காங்டொங்சக்" தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

## 28.

☞ இந்தோனேஷியாவில் சுமாத்திராத் தீவுகளுக்கு அண்மையாக ஏற்பட்ட கடலடிப் பூகம்பத்தினால் நியாஸ்தீவிலுள்ள பிரதான நகரங்களில் பெரும்சேதம் ஏற்பட்டுள்ளது. நகரில் 75 சதவீதம் அழிவடைந்துள்ளது. இரண்டாயிரம் வரையான மக்கள் பலியாகியுள்ளனர்.



☞ சுனாமிப்பேரலை உருவாகலாம் என்ற அச்சம் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து தெற்காசிய தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் வாழ்ந்த கரையோரமக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேற்றம்.பூகம்பம் ஏற்பட்ட போதும் சுனாமிப் பேரலை ஏற்படவில்லை.



☞ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் ரோமானியா நாட்டு ஊடகவியலாளர்கள் இருவர் அமிர்யா மாகாணத்தில் காரில் சென்றுகொண்டிருந்த போது தீவிரவாதிகளால் கடத்தப்பட்டனர்.

☞ ஈராக் தலைநகர் பாக்தாத்தில் ஹேய்அல்-அமில் என்ற இடத்தில் ஈராக் தேசிய பாதுகாப்புப்படை நிலையத்தின் மீது குண்டுத்தாக்குதல் இடம்பெற்றதில் ஒருவர் பலி, ஐந்து பேர் காயம்.




☞ ஈராக்கில் புதிய நாடாளுமன்றம் இரண்டாவது தடவையாகக் கூடியது.

☞ சீனாவின் கிழக்குப் பிராந்தியத்தில் ஜியான்சூ மாநிலத்தில் திரவநிலை. குளோரின் எடுத்துச்சென்ற ட்ரக் வண்டியி லிருந்து சிந்தியதால் சூழல் மாசடைந்து 27 பேர் இறந்துள்ளதுடன் 285பேர் நோய்வாய்ப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

## 29.

☞ அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சின் பிரதிச் செயலர் டேவிட்சந்ரபீல்ட் லெபனான் வெளியுறவுத்துறையமைச்சர் முகமட் கமாட்டுடன் பெய்ரூட்டில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.






**24.03.2005 - 30.03.2005**

## 30.

☞ பாக்தாத்தின் அருகேயுள்ள அமெரிக்க இராணுவமுகாம் ஒன்றினுள் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் வாகனங்கள் பலவும் சேதமடைந்தன.



☞ ஏமன் தலைநகர் சானா அருகில் தீவிர வாதிகள் பொலிஸ் நிலையம் மீது நடத்திய திடீர் தாக்குதலின் பின் தீவிரவாதிக ளுக்கும், பொலிசாருக்குமிடையில் இடம் பெற்ற சண்டையில் எட்டுப் பொலிசார் பலி. பலர் படுகாயம்.

☞ சுமாத்திராத்தீவில் நிலஅதிர்வு ரிச்டர் அளவில் 5.1 புள்ளியாக ஏற்பட்டது. மக்கள் அச்சத்தின் காரணமாக வெளியேறினர்.



☞ அரியானா மாநில அமைச்சர்கள் இருவர் உலங்குவானூர்தி விபத்தில் பலி, சண்டிகரி லிருந்து புறப்பட்ட உலங்குவானூர்தி இடையில் இயந்திரம் இயங்க மறுத்த தாலேயே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த விமர்சனங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளது

**- பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்**

(கொழும்பு)

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும், சகலரும் சந்தோசத்துடன் வாழ்வதற்குமான எதிர்காலத்தை உருவாக்கும்போது விமர்சனங்கள் பலவற்றை எதிர் கொள்ளவேண்டிய நிலையேற் பட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பு அரசாங்கத்தின் ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு நேற்று முன் தினம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வீழ்ச்சியடைந்துள்ள பொருளா தாரத்தை மீளக்கட்டியெழுப்பும் விடயத்தில் பல்வேறு சவால்களை யும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது

இவ்வாறானதொரு சூழ்நிலை யில் விமர்சனங்களையும், சவால் களையும் முறியடிப்பதற்கு அரசாங் கத்திற்கு துணிவு இருக்கின்றது.

தேர்தல் காலத்தின்போது பிரச்சாரம் செய்ததற்கு அமைய பொதுமக்களின் நலன்பேணும் விட யங்கள் அனைத்தையும் நிறை வேற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக் கை எடுத்துள்ளது

எதிர்பாராத வேளையில் ஆழிப் பேரலை தாக்கியதன் காரணமாக அரசாங்கத்தின் இலக்கை அடைய வேண்டிய பயணத்தில் தடையேற் பட்டுள்ளது.

இதேவேளை நாற்பத்தோராயிரம் பட்டதாரிகளுக்கு அரசாங்கத்தின் நிரந்தர தொழில்களை குறிப்பிட்ட காலப்பகுதிகளுக்குள் வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகவும் பிரதமர் தனது அறிக் கையில்தெரிவித்தார். (32)

# ஐந்து வருடத்திற்குள் நான்கு தேர்தல்கள்; சாதனையை எட்டுவார் சந்திரிகா!

**சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு-**

(கொழும்பு)

ஐந்து வருடங்களுக்குள் நான்கு தேர்தல்களை நடத்திக் காட்டிய சாதனையை சனாதிபதி ஏற்படுத் துகின்ற காலம் அண்மித்துள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரி வித்துள்ளது.

இந்த நிலையில், சனாதிபதி எந்தத் தேர்தலை நடத்தினாலும் அதற்கு முகம் கொடுக்கத் தயாராகவே உள்ளதாக கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித் துள்ளார். நாட்டில் எந்த ஒருதேர்தல் நடத்தப்பட்டாலும் அதில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது அரசியல் சக்திக்கு பாதகம் ஏற்படாதவாறு நடந்துகொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். குருநாகலில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார். (32)

# புதியகாட்சியறை திறப்புவிழா

## அழைப்பிதழ்

## செல்லமுத்து புடவை மாளிகை

ஜவுளி உலகில் 35ஆவது வருடத்தில்

காலடி வைத்து தனக்கென்று

தனிமுத்திரை பதித்த

## செல்லமுத்து புடவை மாளிகை

04.04.2005 திங்கட்கிழமை அன்று

அதே இடத்தில் அதி நவீன

அடுக்கு மாடிகளைக் கொண்ட

முற்றிலும் குளிரூட்டப்பட்ட




## சண் மாளிகையில்

தனது புதிய சகாப்தத்தை

கோலாகலமாக ஆரம்பிக்கின்றது.



அன்பர்கள் நண்பர்கள் வாடிக்கையாளர்கள்

அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்

நவீன உலகின் புடவைகளின் சாம்ராஜ்யம்

# செல்லமுத்து புடவை மாளிகை

பிரதான வீதி நெல்லியடி

தொ.பே. 021-2263238

சித்திரைப் புத்தாண்டை எங்களோடு கொண்டாட உங்களை அழைக்கின்றோம்

(சி-11597)

# பதவி வெற்றிடம்

## பொது நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களில் பணியமர்த்தல் கோரப்படுகின்றது.

**பணிநிலை:-(அ) நில அளவையாளர்** (SURVEYOR)

**தகைமை:**-(01) நில அளவையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றவர்

அல்லது

(02) அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றில் ஏதாவது ஒரு கற்கை நெறியில் நில அளவை பாடத்தில் சித்தியடைந்து இருத்தல்.

அல்லது

03) க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதபாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அல்லது

04)க.பொ.த (சா/த) பரீட்சையில் கணிதபாடம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

அத்துடன்

05) கணனி தொடர்பான அறிவு மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**பணிநிலை (ஆ) படவரைஞர்** (DRAUGHTSMAN)

**தகைமை:**-(01) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் படவரைஞர் பயிற்சி நெறியைப் பூர்த்தி அடைந்தவர்கள்.

அல்லது

(02) க.பொ.த (உ/த) பரீட்சையில் புவியியல் பாடம் உட்பட மூன்று பாடங்களில் சித்தி அடைந்தவர்கள்.

அல்லது

(03) க.பொ.த (சா/த) பரீட்சையில் சமூகக்கல்வி பாடத்தில் திறமைச் சித்தி உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்து இருத்தல்

அத்துடன்

(04) AUTO CAD / கணனி தொடர்பான அறிவு மேலதிக தகைமையாக கருதப்படும்.

**மேலதிக விபரம்**

(01) *வயதெல்லை:*-30 வயதிற்குட்பட்டவர்கள்

(02) *பயிற்சிக்காலம்:*- 06 மாதங்கள் சம்பளத்துடன் கூடிய பயிற்சி வழங்கப்பட்டு பணிக்கு அமர்த்தப்படும்.

03) *சம்பளம்:*-(1) பயிற்சியின் போது-5000/=

(02)தரம் 3 இல் 5860-7560+2700 / 10X170

*குறிப்பு:*-நில அளவையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றவருக்கு வயதெல்லை தீர்மானிக்கப்படவில்லை சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**பணிநிலை:-(இ) அலுவலக உத்தியோகத்தர்**

**தகைமை:**-(01) அரச அல்லது தனியார் நிறுவனம் ஒன்றில் எழுது வினைஞராக பணியாற்றிய அனுபவம் உள்ளவர்.

(02) ஆங்கில மொழியினை தமிழ் மொழியில் மொழி பெயர்க்கக்கூடிய அனுபவம்

(03) தட்டச்சு, கணனி என்பனவற்றில் உரிய அனுபவம் பெற்றவர்கள்.

*வயதெல்லை:*-55 வயதிற்குட்பட்டவர்கள்.

(வேலைத் தளத்தில் தங்கி நின்று வேலை செய்யக்கூடியவர்கள்)

*சம்பளம்:*-நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:-30.04.2005

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-விளம்பர இல:-5898 ஈழநாதம் பணிமனை, கிளிநொச்சி.

மாதிரி விண்ணப்பப் படிவம்

***நில அளவை, படவரைஞர், அலுவலக உத்தியோகத்தர், பணிநிலைக்கான பதவி வெற்றிடம்-2005***

பணிநிலை தெரிவு

01. 01 ஆம் தெரிவு [ ]

02. 02 ஆம் தெரிவு [ ]

01.முழுப்பெயர்:-

02.பிறந்த திகதி:-

03.நிரந்தர முகவரி:-

04.தற்காலிக முகவரி:-

05.கல்வித்தகைமை:-

(அ) க.பொ.த (சா/த)

01.............................. 05..............................

02.............................. 06..............................

03.............................. 07..............................

04.............................. 08..............................

(ஆ) க.பொ.த (உ/த)

01.............................. 03..............................

02.............................. 04..............................

(இ).தொழில் நுட்ப கல்வித்தகைமை (நிறுவன பெயருடன்):-

(ஈ)கணனி தொடர்பான தகைமை:-

(உ) மேலதிக விபரம்/தகைமை:-

(ஊ) குடும்ப விபரம்/நிலை:-

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் உண்மை என உறுதிப்படுத்துகின்றேன்.

* விண்ணப்பதாரியின் ஒப்பம்:

* திகதி:-

(5898)

## காஷ்மீர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு

### பெனாசிர் பூட்டோ

காஷ்மீர் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்வுகாண முடியும் என்று பெனாசிர் பூட்டோ கூறியுள்ளார்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும், பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவருமான பெனாசிர் பூட்டோ இந்தியச் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு துபாய் புறப்பட்டுச் செல்லும் முன் நேற்று முன்தினம் கருத்துத் தெரிவிக்கையில்,

காஷ்மீர் விவகாரத்தைப் புனிதப் போர் நடத்துவதற்கான ஒரு பிரச்சினையாக நாங்கள் கருதவில்லை. காஷ்மீர் பிரச்சினைக்காக இந்தியாவும், பாகிஸ்தானும் போரிட்டுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பேச்சுவார்த்தை மூலம்தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை வரவேற்கின்றேன். பரஸ்பர நல்லெண்ணத்தை மேம்படுத்த இருநாட்டு மக்களுக்கும் இடையே நேரடித் தொடர்பு ஏற்படுவது முக்கியமானது ஆகும். மேலும் சில வழித்தடங்களிலும் இந்தியா-பாகிஸ்தான் இடையே போக்குவரத்து தொடங்க வேண்டும் என்றார் பூட்டோ.

## கட்சி மத்திய குழுவிலிருந்து விலகவுள்ளேன்

### - ஜோதிபாசு

நீண்டகாலமாக மேற்கு வங்காள முதல்வராக இருந்தவரும், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவருமான ஜோதிபாசு தான் கட்சி நடவடிக்கையிலிருந்து ஓய்வுபெறப் போவதாக அறிவித்துள்ளார்.இதுபற்றி ஜோதிபாசு தெரிவித்ததாவது,

எனக்கு91 வயது ஆகிவிட்டது. உடல்நலம் சீராக இல்லை. பலவீனமாக இருக்கிறேன். அதனால் அடிக்கடி விமானத்தில் டில்லி போக முடியவில்லை. எனவே கட்சி மத்தியகுழுவிலிருந்து விலக விரும்புகிறேன். ஆனால் மேற்கு வங்காள மாநில கட்சி விவகாரத்தில் கவனம் செலுத்துவேன். இதுபோல் கட்சி மத்திய கமிட்டியில் இருந்தும் வெளியேற விரும்புகிறேன்.

முன்பு ஒருமுறை எனது விலகல் முடிவை கட்சி மத்திய குழுவில் முன் வைத்தேன். ஆனால் அதை மத்திய குழு உறுப்பினர்கள் ஏற்கவில்லை. மீண்டும் வருகிற ஆறாம் திகதி டில்லியில் தொடங்கும் கூட்டத்தில் எனது விருப்பத்தைச் சொல்வேன். தலைவர்கள் ஏற்பார்களா? நிராகரிப்பார்களா? என்று தெரியவில்லை இவ்வாறு அவர் கூறினார். " ஆனால் மத்திய குழுவில் இருந்து விலகுவதற்கு ஜோதிபாசுவை அனுமதிக்க மாட்டோம். அவர் சேவை கட்சி மேலிடத் திற்குத் தேவை என்று மத்தியகுழு உறுப்பினரும், மேற்கு வங்காள மார்ச்சிய கம்யூனிஸ்டு தலைவருமான அனில் பிஸ்வாஸ் கூறினார். நீண்டகாலம் மேற்கு வங்காள முதலமைச்சராக இருந்த ஜோதிபாசு தனது வயது மற்றும் உடல்நலக்குறைவு காரணமாக 2001 ஆம் ஆண்டு முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


**VACANCY**

**TRANSLATOR**

ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.

**WALK IN INTERVIEW**

ASB - Kilinochchi is a German nongovernmental organization

There exists a vacancy in the above organization for the post of female translator. suitable candidates should beable to translate conversations from English to Tamil and vice versa. Kindly present yourself for a first interview on 06.04.2005 at 02.00 p.m. with details of educational qualification.

preference will be given to those with similar experience.

**ASB Regional Office,**
**156, jaffna Road,**
**paranthan.**

Tel: 021 2285070,

(5962)



**09ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

**கப்டன் பெரியதம்பி (லக்சுமன்)**

**(பொன்னுத்துரை செலஸ் அமின்)**

பிறப்பு:- 1977 - 05 - 01

வீரச்சாவு:- 1996 - 04 - 04

ஒன்பதாம் ஆண்டு நினைவு நிகழ்வு யூலன் வீதி, அச்செழு, நீர்வேலி என்ற முகவரியில் நடைபெறவிருப்பதால் போராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.


தகவல்:-

எஸ். பொன்னுத்துரை

(தந்தை)

(5960)

# கயானா டெஸ்ட் கிரிக்கெட்போட்டி தென்னாபிரிக்க அணி தடுமாற்றம்




கயானாவில் நடைபெறும் மேற்கிந்தியத்தீவுகளுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி பலோ - ஒன் நிலையைத் தவிர்க்க போராட வேண்டிய நிலையிலுள்ளது.

மேற்கிந்தியத்தீவின் முதல் இனிங்ஸ் ஓட்டங்களான 543இற்கு பதிலளித்தாடும் தென்னாபிரிக்கா மூன்றாம் நாளான நேற்றுமுன்தினம் காலநிலை சீரின்மையால் ஆட்டம் முன்கூட்டியே நிறுத்தப்பட்டபோது ஆறு விக்கெட்டுக்களையிழந்து 130 ஓட்டங்களையே பெற்றது.

மேற்கிந்தியத்தீவு பந்து வீச்சாளர்களின் துல்லியமான பந்துவீச்சில் 16 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையிழந்தது. அணித்தலைவர் கிரேம் ஸ்மித் இரண்டு ஓட்டங்கள் பெற்ற நிலையில் கொலின்சின் பந்து வீச்சில் பிரவ்னியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். ரூடோல்ப், கலிஸ் இருவரும் ஓட்டம் பெறாமல் ஆட்டமிழந்தனர்..

வில்லியர்ஸ் அதிக பட்சமாக 41 ஓட்டம் எடுத்தார். மார்க் பவுச்சரும் நிக்கி போயேவும் முறையே 32,21 என்ற ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.



தென்னாபிரிக்கா பலோ ஒன்னை தவிர்க்க மேலும் 214 ஓட்டங்கள் பெற வேண்டும். இந்நிலையில் தென்னாபிரிக்க அணியின் பயிற்றுநர் ரே ஜெனிங்ஸ் ஆடுகளம் பற்றி அதிருப்தி வெளியிட்டுள்ளார். அவர் கருத்துத் தெரிவிக்கையில், ஆடுகளம் இரு வழிகளில் மோசமாகக் காணப்படுகிறது என்றும் ஆடு களத்தில் புல் இல்லாது இருப்பது துடுப்பாட்ட வீரருக்கு சாதகமாக இருக்கும் என்றும் உயிரற்ற ஆடுகளம் அவர்களுக்கு பாதகமாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் வருகிறார் பிரைன் லாரா?

## விளம்பர சர்ச்சை முடிவுக்கு வந்தது




விளம்பரசர்ச்சை முடிந்து மீண்டும் அணிக்குத் திரும்புகிறார் பிரைன் லாரா மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் நிர்வாகத்தை அனுசரணை செய்கிறது டிஜிசெல் நிறுவனம். இதன் போட்டி நிறுவனம்கேபிள் அண் வயர்லெஸ் .இந்த நிறுவனத்தின் விளம்பர ஒப்பந்தத்தில் இருக்கின்றனா பிரைன் லாறா ,சர்வான், கிறிஸ் கெய்ல்ஸ், வெய்னி பிரெவோ, வெயனி ஸ்மித், பிடல் எட்வர்ட்ஸ் மற்றும் ரவி ராம்பால் ஆகிய ஏழு வீரர்கள்.

கேபிள் அண் வயர்லெஸ் ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளாவிட்டால் அணியில் இடமில்லை என்று எச்சரித்தது மேற்கிந்தியத்தீவு கிரிகெட் சபை. எச்சரிக்கையை புறக்கணித்தனர் வீரர்கள். சொன்னது போல தென் ஆபிரிக்காவுக்கு எதிரான் முதல் டெஸ்ட் போட்டிக்கு சந்தர்போல் தலைமையிலான புது அணி அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து சர்வான், கெய்ல் இருவரும் தங்கள் ஒப்பந்தத்தை ரத்துச் செய்தனர். மற்றவர்களும் இப்போது (வேறு வழியின்றி) கிரிகெட் சபை உத்தரவுக்குக் கீழ்ப்படிகின்றனர். பிரைன் லாறா உட்பட எஞ்சிய ஐந்து வீரர்களையும் கேபிள் அண் வயர்லெஸ் நிறுவனம் தனது ஒப்பந்தத்தில் இருந்து நேற்று முன்தினம் தற்காலிமாக விலக்கிக் கொண்டது.

வீண் சர்ச்சைகளைத் தவிர்ப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக இந்த நிறுவனம் அறிவித்துள்ளது மேற்கிந்தியதீவு கிரிக்கெட் நிர்வாகிகள் கூடி விவாதித்து தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்த ஏழு வீரர்களும் இடம் பெறுவது பற்றி முடிவு செய்வார்கள்.




## இங்கிலாந்து-மேற்கிந்தியத்தீவு போட்டி மழையால் பாதிப்பு; மீண்டும் நடைபெறும்

WOMEN'S CRICKET WORLD CUP 2005 SOUTH AFRICA

தென்னாபிரிக்காவில் நடைபெறும் மகளிர் உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் அரையிறுதிக்கு தகுதி பெற இங்கிலாந்து- மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான கடைசி லீக் போட்டி மழையினால் நேற்று முன்தினம் பாதிப்படைந்தது. எனினும் அவுஸ்திரேலியாவுடனான அரையிறுதிப் போட்டியில் புதன்கிழமை மோதும்.




மேலும் ஒரு அரையிறுதியில் ஆட இந்தியாவும் நியூசிலாந்தும் தகுதி பெற்றுள்ளன. இந்தப் போட்டியும் புதன்கிழமை நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், இங்கிலாந்து வீராங்கனைகளான எட்வட்ஸ் காயம் காரணமாக ஓய்வில் இருக்கும் நிலையில் பியர்சன் தாடையில் ஏற்பட்ட காயங் தொடர்பான வைத்திய அறிக்கைக்காகக் காத்திருக்கிறார்.

## கோல் அடிப்பதில் போட்டி கால்பந்து வீரர்கள் கைகலப்பு



நியூகாஸ்ல் அணிக்கும் அஸ்ரன் வில்லாஅணிக்கும் இடையில் நடைபெற்ற உள்ளூர் உதைபந்தாட்டப்போட்டி ஒன்றில் நியூகாஸ்ல் வீரர்களான சய்ரோன்டையரும் லீ போயரும் மைதானத்தின் மத்தியில் கைகலப்பிலீடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

நியூகாஸ்ல் அணி மூன்றுக்கு பூச்சியம் என்ற கோல் கணக்கில் முன்னணியில் நின்ற சமயம் போட்டி முடிவடையமூன்று நிமிடங்கள் இருக்கும் போது இவர்கள் மோதலில் ஈடுபட்டனர். இதனையடுத்து புள்ளி வழங்குனரான கரத் பரி இவர்களுக்கிடையில் சமரசம் செய்து மோதலை விலக்கினார் இதன் காரணமாக இம்மாதம் 17ஆம் திகதி நடைபெறும் எவ்.ஏ. கிண்ணப் போட்டிகளிலிருந்து இருவரும் நீக்கப்பட்டுள்ளனர்.

சமரசம் செய்தவர் தெரிவிக்கும் போது கோல் அடிப்பதில் போட்டி யேற்பட்டதாகவும் அதுவே மோதலுக்கு காரணம் என்றும் தெரிவித்ததும் பின்னர் இவர்கள் வருந்துவர் என்றும் கூறியுள்ளார்.

## சர்வதேச சதுரங்கப் போட்டியில் கனேடியப் பிரதிநிதியாக தமிழ்ச்சிறுவன்

சர்வதேச சதுரங்கப் போட்டியில்கனேடியப் பிரதிநிதியாக தமிழ்ச் சிறுவன் அக்குவினோ இனிகோ பங்கேற்கிறார்.

இந்தியத் தமிழ்க் குடும்பத்தின் இனிகோ பிறான்சீஸ் மற்றும் திருமதி. அலெக்ஷன் பிலாரட் அவர்களின் இராண்டாவது மகன் அக்குவினோ இனிகோ. 1995 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் சென்னையில் பிறந்தவர். அக்குவினோ இனிகோ 2002ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெற்ற எட்டு வயதிற்குப்பட்ட ஆண் சிறுவர்களுக்கான சதுரங்கப் போட்டியில் முதலாவது இடத்தைப்பெற்று பட்டம் வென்றார்.

அக்குவினோ இனிகோ குடும்பத்தினர் ஆவணி மாதம் 2003 ஆம்ஆண்டு கனடாவில் குடியேறினர்.அங்கு புனித ஜேம்ஸ்ரவுணில் (டவுன்ரவன்) மத்திய ரொறொன்ரோவில் வாழ்ந்து வருகின்றனர்.இவர்களின் இரண்டு பிள்ளைகளும் புனித லூர்து மாதா பாடசாலையில் படிக்கிறார்கள். அக்குவினோ இனிகோ இந்த வருடம் நான்காம் வகுப்பு படிக்கிறார்.

கோஸ்லாவியாவைச்சேர்ந்த கோறான் மிலிலி அக்குவினோவிற்கு சதுரங்க ஆட்டப்பயிற்சி அளித்து வருகிறார்.இந்த வருடம் 2005 இல் மாசி மாதம் நடந்த ஒன்றி ராறியோ மாநில பத்து வயதிற்குப்பட்ட ஆண் சிறுவர்களுக்குரிய சதுரங்கப்போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்று பத்து வயதிற்குட்பட்ட கனேடியத்தேசிய ஆண் சிறுவர்களுக்குரிய ஆட்டத்தில் பங்கேற்கத்தேர்வு பெற்றார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் தலைநகர் விக்ரோறியாவில் பங்குனி மாதம் 24 முதல் 27 வரை பத்து வயதுதிற்குட்பட்ட அண் சிறுவர்களுக்குரிய சதுரங்கப்போட்டி நடைபெற் றது.இப்போட்டியில் அக்குவினோ முதல் இடத்தைப்பெற்றார். கனேடியத் தேசியப் பட்டம் வென்ற வீரரர்கவும் அவர் தேர்வு செய்யப்பட்டார்.

இதனால் பிரான்ஸ் நாட்டில்வருகின்ற ஆடிமாதம் நடைபெற உள்ள சர்வதேச அளவிலான பத்து வயதிற்குப்பட்ட ஆண் சிறுவர்களுக்குரிய சதுரங்க ஆட்டத்தில் கனடாவின் பிரதிநிதியாக அக்குவினோ பங்கேற்கிறார்

இவரது ஆட்டம் கனடிய பெருங்குடி மக்கள் மத்தியில்மிகவும் ஆர்வத்தையும் நம்பிக்கையையும் ஊட்டியுள்ளது. இவர் இந்த வருடம் உண்மையாகவே கனடா சதுரங்கச் சமூகத்திற்கு அக்குவினோ பெருமை தேடித்தருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் கனேடியத் தமிழ்ச்சமூகத்திற்கும்பெருமையும் மகிழ்ச்சியும் ஏற் பட்டுள்ளது..



அமெரிக்காவிலுள்ள மியாமி "நாஷ்டாக்-100" ஓபன் டென்னிஸ் நடந்துவருகிறது. இதன் பெண்கள் பிரிவில் கிம்கிலிஸ்டர்ஸ்(பெல்ஜியம்) சம்பியன் பட்டம் பெற்றார். இறுதிப்போட்டியில் அவர் 6-3,7-5 என்ற செட் கணக்கில் ஷரபோவாவை (ரஷ்யா) தோற்கடித்தார். வெற்றிக் கோப்பையை கிலிஸ்டர்ஸ் முத்தமிடும் காட்சி.

## பச்சிலைப்பள்ளி பெருவிளையாட்டுப் போட்டி

பச்சிளைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான பெருவிளையாட்டு போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

இதில், ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் சோலை வி.க. முதலாமிடத்தையும், குணா வி.க. இரண்டாம் இடத்தையும், பெண்கள் பிரிவில் சென்பீற்றர்ஸ் வி.க. முதலாமிடத்தையும், பராசக்தி வி.க. இரண்டாம் இடத்தையும் பெற்றன.

கபடி ஆண்கள் பிரிவில் சோலை வி.க. முதலாமிடத்தையும், சென்மேரிஸ் இரண்டாம் இடத்தையும், பெண்கள் பிரிவில் சென்பீற்றர்ஸ் முதலாமிடத்தையும், பூதவராஜர் வி.க. முதலாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.

மத்தியஸ்தர்களாக பரஞ்சோதி, சிவநேசன், விக்ரர்மான், புவனேந்திராஜா ஆகியோர் கடமை யாற்றினர்.

## பதிவுகளை மேற்கொள்க


துணுக்காய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கான ஆண்கள் பெண்கள் இரு பாலருக்கான நீண்ட தூர மரதன் ஓட்டங்களுடன் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடைபெறவிருப்பதால் விளையாட்டு குழுவினர்கள் எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் துணுக்காய் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தரிடம் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து விளையாட்டில் பங்கு கொள்ள வேண்டும் என விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (24)

### - வவுனியா அண்ணாநகர் -

## பரமேஸ்வரா வித்தியாலய விளையாட்டுப் போட்டி

வவுனியா அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் திருமதி எல்.எவ். நடேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், . வினோ நோகராதலிங்கம், சிவநாதன் கிஷோர், சதாசிவம் கனகரத்தினம், விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி. ஞானவேல் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க. பேர்னாட், வவுனியா வர்த்தக வங்கி முகாமையாளர் ஆர். சிவஞானம், வவுனியா ஹற்றன் நஷனல் வங்கி முகாமையாளர் எஸ். ஏ. ஆறுமுகம் ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக வவுனியா மாவட்ட தேசிய எழுச்சி அமைப்புத் தலைவர் . செ. சபாநாதன், ஊடகவியலாளர் கனகரவி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)



## சிந்தனைக்கு

*மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ளும்போதுதான் மக்கள் எம்முடன் இணைந்து கொள்வார்கள்.*

தமிழீழ தேசியத் தலைவர்.



# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 04-03-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com



## இவர்கள் யார் பக்கம்?

அரசியலமைப்பை மாற்றி அமைக்க சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படுமென அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவிக்கையில், அதிகாரமுள்ள சனாதிபதி முறையை ஒழிக்க சர்வசன வாக்கெடுப்பு எதுவும் நடைபெறமாட்டாது என அமைச்சர் மங்களசமரவீர தெரிவித்துள்ளார். இந்த வகையில் ஒரே விடயத்தில் சனாதிபதி சந்திரிகாவிற்கு நெருக்கமானவர்களான இரு சிரேஷ்ட அமைச்சர்கள் முரண்பாடாகப் பேசியுள்ளனர்.

இதில், அநுரா பண்டாரநாயக்க சனாதிபதி சந்திரிகாவின் சகோதரர். பண்டாரநாயக்க குடும்பத்தின் வாரிசு என்ற ரீதியில் ஆட்சிக்கு வாரிசுரிமை கோருபவர். இரண்டாமவர் சுதந்திரக் கட்சிக்குள் சனாதிபதி சந்திரிகாவிற்கு மிக ஆதரவானதொருவர் என்பதும் இம்முறை ஐ.ம.சு.முன்னணி ஆட்சிக்கு வரப்பெரும் பங்காற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதில் அநுரா பண்டாரநாயக்க அண்மையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில், அடுத்த ஆறு ஆண்டுகளுக்கும் சந்திரிகா குமாரதுங்காவே சனாதிபதி. எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதவிக்குவர இருபது வருடங்கள் காத்திருக்க வேண்டும் எனக் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சி முறை ஒழிப்புத் தொடர்பாகக் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்தப் போவதாகச் சனாதிபதி சந்திரிகா கூறியிருப்பினும், இது நடைமுறையில் எத்தனைதூரம் சாத்தியமானது? என்பது கேள்விக்குரிய தொன்றே. ஏனெனில், கருத்துக் கணிப்புத் தொடர்பாக அரசியல் யாப்பு விவகாரங்கள் ஒருபுறம் இருக்க, ஆளும் கூட்டணிக்குள்கூட உறுதியான நிலைப்பாடு ஒன்று இல்லை.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு ஆளும் கூட்டணிக்குள் மட்டுமல்ல, ஆளும் கூட்டணிக்கு வெளியில் இருந்து ஆதரவளிக்கும் கட்சிகள் இடையிலும் ஒருமித்த கருத்து இல்லை. இதில், அமைச்சரவையில் பங்கேற்கும் சிறுபான்மை இனக்கட்சிகளின் ஆதரவு கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் மிக அரிதாகவே உள்ளது.

எடுத்துக்காட்டாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஏற்கனவே இதற்கு ஒத்துழைக்கப்போவதில்லையென அறிவிப்புச் செய்துள்ளது. அத்தோடு, தீவிர பௌத்த அடிப்படைவாதக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது. ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்தில் இடம் பெறாமல் இருப்பினும், இ.தொ.காங்கிரஸ் எதிர்க்கும் பட்சத்தில் முக்கியத்துவமானதாகவே இருக்கும்.

இது ஒரு புறம் இருக்க, ஆளும் ஐ.ம.சு. முன்னணியில் அங்கம் வகிக்கும் முக்கிய பங்களியான ஜே.வி.பி. இது தொடர்பாக எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கும் என்பதும் கேள்விக்குரியதே. சனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பிற்கு ஆதரவு வழங்க அது தயாராக இருப்பதாகக் கூறிக் கொண்டாலும், இறுதிவரை அத்தகைய நிலைப்பாட்டை ஜே.வி.பி. கொண்டிருக்குமா? என்பது எதிர்வு கூற முடியாததொன்றே. ஏனெனில், ஜே.வி.பி.யின் தற்போதைய இலக்கில் அதிகாரம் என்பது முக்கியத்துமானதாகியுள்ளது.

ஜே.வி.பி. தேர்தல் களத்தில் குதித்தபோது தாம் பதவிக்குப் போட்டியிடவில்லை எனக் கூறியிருப்பினும், தற்பொழுது அதிகாரத்திற்காகப் போட்டியிடும் கட்சியாகவே அது முழுஅளவில் மாறியுள்ளது. இதன் வெளிப்பாடே கூட்டணிக்குள் அடிக்கடி முரண்பட வேண்டிய நிலை அதற்கு ஏற்பட்டுள்ளது.

அதாவது சுதந்திரக் கட்சியுடன் பல்வேறு விடயங்களில் அது அனுசரித்த போக்கைக் கொண்டதாக இல்லை. மாறாக, முரண்பாடுகளை பெரிதுபடுத்தும் வகையிலேயே அதன் நடவடிக்கைகள் உள்ளன. இந்த வகையில், ஜே.வி.பி. தற்பொழுது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சிமுறை தொடர்பான கருத்துக் கணிப்பிற்கு உடன்பாடானது போல் கருத்துக்களை வெளிப்படுத்தினும், கருத்துக் கணிப்பு ஒன்று நடைபெறும் பட்சத்தில் அதன் தீர்மானம் எவ்வாறு இருக்கும் என தற்பொழுது கூறிவிட முடியாது.

இத்தகையதொரு நிலையில், ஆளும் கூட்டணியில் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே இது தொடர்பாக ஒருமித்த கருத்து இருப்பதாக இல்லை. அவ்வாறு இருப்பின் அநுராவும், மங்களவும் இவ்வாறு கூறியிருப்பதற்கு வாய்ப்பில்லை. அத்தோடு, இவ்விடத்தில் அநுரா பண்டாரநாயக்க – மங்கள சமரவீர மட்டும் தான் மறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்றில்லை. பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் சனாதிபதி சந்திரிகாவின் கருத்துக் கணிப்பிற்கு ஆதரவான கருத்தைக் கொண்டிருப்பாரா? என்பது கேள்வியே.

ஆனால், அநுராவும், மங்களவும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு எவ்வாறு நெருக்கமானவர்களோ அதேபோன்று ஜே.வி.பி.க்கும் நெருக்கமானவர்கள். ஆகையினால், இவர்கள் இருவரும் சனாதிபதி சந்திரிகாவின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றார்களா? அன்றி ஜே.வி.பி.யின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றார்களா? என்ற கேள்வியும் நிராகரித்துவிடக் கூடியதல்ல.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம், இனப்பிரச்சினை விடயத்தில் மட்டுமல்ல, வேறு எந்த விடயத்திலும்கூட ஆளும் கட்சிக் கூட்டணிக்குள்ளும், அதில் அங்கம் வகிக்கும் கட்சிக்குள்ளும் ஒத்திசைவான கருத்து எதுவுமில்லை. அவர்களிடம் காணப்படும் ஒரே ஒரு ஒற்றுமை ஆட்சி அதிகாரத்தை எவ்வாறேனும் தக்கவைத்துக் கொள்வது என்பது மட்டுமே.

# சனாதிபதி கொலையே செய்தாலும் சட்டநடவடிக்கை எடுக்க முடியாது!

## வனவள சுற்றாடல் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி

(கொழும்பு)

சனாதிபதி கொலையே செய்தாலும் அவரை நீதிமன்றுக்கு வரவழைக்க முடியாது. அவருக்கெதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது. அந்த வகையிலேயே தற்போதுள்ள அரசியலமைப்புச் சட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே தான் நிறைவேற்று சனாதிபதி நிர்வாக முறையை மாற்றியமைத்து பிரதமர் பாராளுமன்றத்துக்கு பதிலளிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தியமைக்கவுள்ளோம். இதற்கு சகல இனத்தவரும் தமது ஒத்துழைப்பை நல்க வேண்டும் என்று வனவள சுற்றாடல் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

திடீர் பரிசோதனை அதிகாரிகளுக்கு உந்துருளிகள் வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை வனவள சுற்றடால் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

பிரதமர் உட்பட நாட்டில் வாழும் அனைத்து மக்களும் சட்டத்திற்கு முன் சமம். எனவே வனவளத்தை அழிப்போர் அல்லது வனவிலங்குளை வேட்டையாடுவோர் எந்த சமூக அந்தஸ்த்தில் இருந்தாலும் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும். உங்களது நடவடிக்கைகளுக்கு நான் பூரண ஒத்துழைப்பை வழங்குவேன். உங்கள் கடமையை நிறைவேற்ற தயக்கம் காட்டாதீர்கள். எமது வனவளம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இந்த நிலையைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது வனவளத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்குவுள்ளது எனத் தெரிவித்தார். (32)

## – அவுஸ்திரேலிய தமிழ் இளையோர் அமைப்பு–

# சுனாமிப் பாதிப்பை உணர்த்த 24 மணிநேர உண்ணாவிரதம்

(சிட்னி)

சுனாமி அனர்த்தப் பாதிப்பை அவுஸ்திரேலியாவில் உள்ளோருக்கு உணர்த்துமுகமாக அவுஸ்திரேலிய வாழ் தமிழ் இளையோர் அமைப்பினரால் 24 மணி நேர உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் தாயகத்தில் தமிழ் மக்கள் 24 மணி நேரத்தில் எத்தகைய அவலத்தை இடர்களை சந்தித்தார்களோ அதை அவுஸ்திரேலிய வாழ் மக்களுக்கு உணர்த்துமுகமாக சனிக்கிழமை மாலை நான்கு மணியிலிருந்து அவுஸ்திரேலிய வாழ் புலம்பெயர் தமிழ் மக்களை ஒருங்கிணைத்து தமிழ் இளையோர் அமைப்பினர் 24மணி நேர அடையாள உண்ணா விரதத்தினை மேற்கொண்டுள்ளனர்.

இதில் பங்கு கொள்ளும் அனைவரும் உணவின்றி மாற்றுடையின்றி திறந்த வெளிப் பூங்கா ஒன்றில் தாயகத்தில் அகதிகள் தறப்பாளில் தங்கியிருந்தது போன்று இங்கும் இரவுபகலாக இருந்து உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். இந்த அடையாள உண்ணா விரதத்தில் பெருமளவான மக்கள் திரண்டிருந்தனர் ஆயினும் இந்நிகழ்வை முற்றிலும் சோகமயப்படுத்தாது அவுஸ்திரேலிய வாழ் இளம் சமூகத்தினருக்கு ஈழத்துக் கலைகள், விளையாட்டுகள் போன்ற பாரம்பரியங்களை எடுத்துக் காட்டும் வகையிலான நிகழ்வுகளும் இடம் பெற்றன.

# 107 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் பாரத் பொற்றோலியம் கொள்வனவு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடமிருந்து இந்திய பாரத் பெற்றோலியம் சுமார் 107 எரிபொருள் நிரப்பு நிலையங்களை கொள்வனவு செய்யவுள்ளது. இதற்காக அந்த நிறுவனம் 84 மில்லியன் டொலர் களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தானத்துக்கு செலுத்தவுள்ளது. இதன் அங்கிகாரத்துக்காகவே அண்மையில் அமைச்சரவை கூடவிருந்தது. எனினும் அது ஜே.வி.பி யின் தூண்டுதலால் ரத்துச்செய்யப்பட்டது.

இந்த நிலையில் ஜே.வி.பியை இணங்கச்செய்து பாரத் பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு குறிப்பிட்ட எரிபொருள் நிலையங்களை விற்பனை செய்ய அரசாங்கம் முயற்சித்து வருகிறது என தெரிவிக்கப் படுகின்றது. (32)

## - மட்டக்களப்பில் சுனாமியால் பாதிக்கப்பட்டு -

# அகதிமுகாம்களில் இருந்தவர்கள் இடைத்தங்கல் முகாமுக்கு மாற்றம்

(மட்டக்களப்பு)

சுனாமி அனர்த்தம் காரணமாக மட்டக்களப்பு ஆலையடிவேம்பில் கடந்த மூன்று மாத காலமாக அகதி முகாம்களில் வாழ்ந்து வந்த அனைவரும் ஒன்பது இடைத்தங்கல் முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளார்கள்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் 440 குடும்பங்களைச் சேர்ந்த 1437 பேர் முகாம்களில் வாழ்ந்துவந்தனர். சின்ன முகத்துவாரத்தைச் சேர்ந்த 325 குடும்பங்களும்,தம்பட்டையைச் சேர்ந்த 115 குடும்பங்களும் இவற்றில் அடங்கும். இதுவரை 440 குடும்பங்களும் இருந்து வந்த மூன்று பாடசாலைகள் கல்வி நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் எஸ்.அருள்ராஜா தெரிவித்தார்.

ஆலையடிவேம்பு இராமகிருஷ்ணா தேசிய கல்லூரி, இராமகிருஷ்ணா மிஷன் பாடசாலை, கண்ணகி கிராம தமிழ்ப் பாடசாலை ஆகிய பாடசாலைகளே ஒப்படைக்கப்பட்டன.

தற்போது அகதிகள் ஆலையடி வேம்பு பிரதேசத்திலுள்ள வை.எம்.சீ.ஏ.மெதடிஸ்த தேவாலயம்,நெசவு நிலையம் கவடாப்பிட்டி கண்ணகி கிராமம்,சிங்கள மகாவித்தியாலயம், மன்னன் தோட்டம் போன்ற இடங்களில் தங்கியுள்ளனர்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் 80 வீடுகளையும்,தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை 50 வீடுகளையும்,ஐ.ஓ.எம். 97 வீடுகளையும், ஷடோ 50 வீடுகளையும்,எவ்.எஸ்.டி. 64 வீடுகளையும்,ஏ.டபிள்யூ.எவ். மகாசக்தி என்பன 60 வீடுகளையும் அமைத்துக்கொடுத்துள்ளதாக அருள்ராஜா மேலும் கூறினார்.

குறிப்பிட்ட 440 குடும்பங்களையும் எதிர்காலத்தில் நிரந்தரமாகக் குடியேற்றுவதற்கு புளியம்பத்தை, கவடாப்பிட்டி ஆகிய இரு பிரதேசங்கள் இனங்காணப்பட்டு, ஆரம்பக் கட்டப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

புளியம்பத்தைக் கிராமத்தில் 25 ஏக்கரிலும்,கவடாப்பிட்டிக் கிராமத்தில் 18 ஏக்கரிலும் நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்காக ஜப்பான் நிறுவனமொன்று இணங்கியிருப்பதாகவும் பிரதேச செயலாளர் எஸ்.அருள்ராஜா மேலும் கூறினார்.

# சுனாமி பற்றிய வதந்தியால் ஹிக்கடுவயில் பதற்றம்

(ஹிக்கடுவ)

தென்னிலங்கை நகரான ஹிக்கடுவயில் மீண்டும் சுனாமி ஏற்படும் என்ற வதந்தியினால் பதற்றநிலை தோன்றியது. நேற்று முன்தினம் இரவு இந்த சம்பவம் இடம்பெற்றது. எனினும் பின்னர் அது இயல்பு நிலைக்கு வந்தது. சுனாமி ஏற்பட்டு விட்டதாக வெளியான தகவலையடுத்து பெருமளவிலான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு அவசரமாக வெளியேறினர்.

விடுதி ஒன்றில் தங்கியிருந்த வெளிநாட்டு உல்லாசப் பயணி ஒருவரே இந்த வதந்தியை பரப்பியதாக தெரிவிக்கப்படுகிறது. இவர் நேற்று முன்தினம் பகல் ஏற்பட்டதாக இணையத்தளம் ஒன்றில் வெளியான புவியதிர்வைக் கொண்டே இந்த செய்தியை மக்களுக்கு தெரிவித்தாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (32)

# மீனவருக்கு பிரான்ஸ் வழங்கிய கப்பலை சிறிலங்கா கடற்படையினர் கபளீகரம்!

### அது பாவனைக்கு உதவாது எனசுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கருத்து

(கொழும்பு)

பிரான்சிலிருந்து சிறிலங்கா அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட மீன்பிடி இழுவைக் கப்பலை சிறிலங்கா இராணுவம் பயன்படுத்த சிறிலங்கா சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்காக கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கும் தன்னார்வ தொண்டு நிறுவனமான பிரான்ஸ் தன்னார்வ நிறுவனத்திடமிருந்து இந்தப் பயன்படுத்த உதவாத மீன்பிடிக் கப்பலை வாங்கியது. சிறிலங்கா கடற்படையினர் தமது இராணுவத் தேவைகளுக்கு இதைப் பயன்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதற்கு பிரான்ஸ் ஊடகங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தன.

இந்நிலையில் கொழும்பில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இந்த மீன்பிடிக் கப்பல் முறைப்படி இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இராணுவத்திடம் இது ஒப்படைக்கப்பட்டாலும் ஆழ்கடலில் மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான பயிற்சியை இந்தக் கப்பல் மூலம் அளிப்போம் என்று சிறிலங்கா அரசு கூறியுள்ளது.

ஆனால் பாவனைக்கு உதவாத இந்தக் கப்பலை எந்த ஒரு நடவடிக்கைக்கும் பயன்படுத்தக் கூடாது என்று கூறி சிறிலங்கா சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் இது குறித்து தெரிவித்துள்ளதாவது. சில ஆண்டுகளுக்கு முன்பே தன்னிடம் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாவனைக்கு உதவாத மீன்பிடிக் கப்பல்களை இந்தியா, இந்தோனேஷியா, சிறிலங்கா, சோமாலியா உள்ளிட்ட நாடுகளுக்கு அளிக்கப்போவதாக பிரான்ஸ் அறிவித்திருந்தது. ஆனால் உண்மையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் சுற்றுச் சூழல் விதிகளின் கீழ் இவை தடை செய்யப்பட்டவை ஆகும்.

அந்த உண்மையை பிரான்ஸ் மறைத்துவிட்டது. இந்நிலையில் தான் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்காக சிமோ கெஹ்ஹினியா என்ற கிடங்கில் கிடந்த படகை பிரான்ஸ் நாட்டினர் அளித்துள்ளனர்.

கடலில் எந்த ஒரு நடவடிக்கைக்கும் இதனைப் பயன்படுத்துவதும் கடல் வளங்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் கடும் சேதத்தை ஏற்படுத்தும்.

இந்த ஆழ்கடல் மீன்பிடி இழுவைக்கப்பல் 55 மீற்றர் நீளமானது பிரான்ஸின் பிரித்தான் பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்களாலும், அங்குள்ள நலன்புரிச் சங்கங்களாலும், கடந்த பெப்ரவரி மாதம் சிறிலங்கா அரசிற்கு வழங்கப்பட்டது. 12 ஆயிரம் கிலோ மீற்றர் பயணம் செய்து கொழும்பை வந்தடைந்த இந்தக் கப்பலைப் பார்வையிட்ட சிறிலங்கா கடற்படையின் உயர் அதிகாரிகள் இது நிவாரணப் பணிகளுக்குத் தேவையில்லை என்றும், கடற்படையினருக்குத் தேவைப்படுவதாகவும் கூறி அதனைத் தமது பொறுப்பில் வைத்துக்கொண்டனர். இந்தக் கப்பலுக்கு பி 622 என்ற கடற்படைப் பதிவிலக்கமும் அவர்களால் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் பிரான்ஸ் ஊடகங்க ளால் அம்பலப்படுத்தப்பட்டது. இந்தக் கப்பலில் தாங்கள் அனுப்பிய ஐந்நூறு தொன் மனிதாபிமான உதவிப்பொருட்களும், பாதிக்கப் பட்ட மக்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்காது என்றும் அந்த ஊடகம் சுட்டிக்காட்டியிருந்தது.

# சுனாமிப்பாதிப்பில் நாடு; ஆட்சியமைப்பதில் கட்சிகள்!

### —— கண்டிக்கின்றார் இடது சாரி முன்னணித்தலைவர்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் நாடு பாதிக்கப்பட்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் சில அரசியல் கட்சிகள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஆட்சியமைக்க முயல்வதை கண்டிக்க வேண்டும் என சனநாயக இடது சாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

நாம் இந்த அரசாங்கத்தை பொதுமக்களின் பக்கம் திருப்ப வேண்டும் இதற்கு மாற்றமாக தேர்தல் ஒன்று குறித்து பேசுவது பொருத்தமற்றது. சில அரசியல் கட்சிகள் தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் இறங்கியுள்ளன எனத் தெரிவித்தார்.

## மக்களுக்கான...

யாகப் பாதிக்கப்பட்டுள்ளன. கடல் அனர்த்தத்தின் போதும் தமிழர் பிரதேசத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ஆனால் அரச அபிவிருத்தி வேலைகள் இங்கு முன்னெடுக்கப் படுவதில்லை. அரசாங்கம் இப்பகுதிகளை ஓரவஞ்சகத்துடன் நோக்குகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற இக்கூட்டத்தில் பெருமளவான அரச அதிகாரிகள் கலந்து கொண்டமையும் குறிபபிடத்தக்கது.

(32)

## இலங்கையில்...

ஏற்படுத்தப்பட்டுள்ள இடங்கள் தாழ்ந்த நிலப்பிரதேசங்களாகும். இவர்களின் இருப்பிடங்களுக்குள் மழைநீர் புகுந்துள்ளதால் அனைத்து உடமைகளும் சேதமடைந்துள்ளன.

தமது இருப்பிடங்களை விட்டு ஒரு பகுதியினர் வெளியேறி அயலிலுள்ள பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்துள்ளார்கள். தொடர்ந்தும் மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. அரசாங்க அதிகாரிகள் யாரும் இவர்களைச் சென்று இதுவரை பார்க்கவில்லை எனவும், வெள்ளப் பெருக்கு ஏற்படாது தவிர்க்க முன்னேற்பாட்டு நடவடிக்கை எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் செய்தியாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

## அதிகாரத்தை....

அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த இடமளிக்கப் போவதில்லை என கூறுகிறது. இன்னும் இரண்டு வாரங்களில் இதனைச் செய்யப்போவதாக சனாதிபதி கூறுகிறார். விருப்பம் உள்ளவர்கள் இருக்கலாம் விருப்பமில்லாதவர்கள் போகலாம் என்றும் சனாதிபதி கூறுகின்றார் சமஷ்டி முறையை ஏற்படுத்தப் போவதாகவும் கூறுகின்றார். அதிகாரப் பேய் பிடித்த இந்த அரசாங்கம் நாட்டை முன்னேற்றுவதற்கு அல்லாமல் தமது அதிகாரத்தை பாதுகாத்து கொள்ளவே முனைகிறது. ஒவ்வொரு விடயத்திலும் உறுதியளிக்கிறார்கள்.

அதன் பின்னர் ஒவ்வொருவரும் ஒருவர் மீது ஒருவர் மாறி மாறி விமர்சித்துக் கொள்கிறார்கள். பெற்றோலியக் கூட்டுத்தபனமும் மின்சாரசபையும் தமது பரம்பரை சொத்தென ஜே.வி.பி கூறுவதாக சனாதிபதி கூறுகின்றார். அவைகளை தமது சிறிலங்கா சுதந்தரக் கட்சியின் சொத்தென சானாதிபதி கூறியுள்ளார் என்றார் ரணில் விக்கிரம சிங்க.

## நேர்முகத்தேர்வு

(அலுவலக செய்தியாளர்)

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் பணிநிலை வேண்டுகைக்கமைய விண்ணப்பித்தோருக்கான நேர்முகத்தேர்வு நடைபெறவுள்ளது.

இந்நிறுவனத்தில் எதிர்வரும் புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நடத்தப்படவுள்ள நேர்முகத் தேர்விற்கு பணிநிலைக்கான விண்ணப்பங்களை அனுப்பியவர்கள் சகல ஆவணங்களுடனும் அன்றைய தினம் சமுகமளிக்கும் வண்ணம் நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன நிர்வாகப்பணிப்பாளர் வேண்டியுள்ளார். (சோ)

## சுனாமிப்...

லண்டன் செல்வதாக அவர் அறிவித்துள்ளார்.

ஜே.வி.பி. எதிர்ப்புக்களை பற்றி நான் கவலைப்படப்போவதில்லை. இந்த ஒப்பந்தத்தில் கட்சியின் தலைவியாக அல்ல ஒரு நாட்டின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவியாகவே இதில் கையொப்பம் இடுகிறேன். இக்கூட்டு ஒப்பந்தத்தை ஜே.வி.பி. எதிர்க்கமாட்டாது அப்படி அவர்கள் எதிர்த்து அரசாங்கத்தில் இருந்து வெளியேறினால் அரசாங்கத்தைக் கலைத்து விடுவேன் என சிறிலங்கா சனாதிபதி தெரிவித்துள்ளார்.

## சுனாமி....

எதுவும் தமது நாட்டிடம் இல்லை எனக் குறிப்பிட்டார். அதே நேரம் இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்கு முழு ஒத்துழைப்பை தருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். சனாதி பதி தம் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தினாலும் தற்சமயம் தமக்கிடையிலான புரிந்துணர்வு சிறப்பாக உள்ளதாக சூல் ஹெய்ம் தெரிவித்துள்ளார். தமீழிழ விடுதலைப் புலிகளிடம் வானூர்திகள் இருப்பதாக கூறப்படும் சம்பவம் தொடர்பிலும் சமாதான நகர்வு குறித்து ஜே.வி.பியின் நிலைப்பாடு தொடர்பாகவும் தாம் கருத்து எதனையும் தெரிவிக்க விரும்பவில்லை என சூல்ஹெய்ம் தெரிவித்தார்.


**கூல் லெமனேற்றிங்**

A4 சைஸ் (1/=) மட்டுமே

சிவரஞ்சனம் ஓவ்செற் பிறின்டேர்ஸ
183, பலாலி வீதி, கோண்டாவில்.
T.P.222 6722

**பொலிமர் றபர் ஸ்டாம்**

உங்களிற்குத் தேவையான
றபர் முத்திரைகளை
செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள
சிவரஞ்சனம் ஓவ்செற் பிறிண்டேர்ஸ்
183, பலாலி வீதி, கோண்டாவில்.
(சி.11482) T.P. 222 6722


# உசனில் இருபது வீடுகள்; படையினரால் ஆக்கிரமிப்பு

தென்மராட்சி உசன் பகுதியில் பொதுமக்களின் இருபது வீடுகளை சிறிலங்காப் படையினர் ஆக்கிரமித்துள்ளனர்.

தென்மராட்சிப் படையினர் அப்பகுதியில் உள்ள பெருமள வான பகுதிகளை உயர்பாதுகாப்பு வலயங்களாக காரணம் காட்டி ஆக்கிரமித்துள்ளனர். இதில் இருபது பொதுமக்களின் வீடுகள் இன்று வரை படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதுடன் இங்குள்ள பயன்தரு மரங்களின் பயன்களைப் பெறுவதற்கும் இவ்வுரிமையாளர்களுக்கு படையினர் அனுமதி வழங்காமல் அவற்றையும் அபகரித்து வருகின்றனர்.

இவ் இருபது குடும்பங்களும் உறவினர் வீடுகளிலும், நலன்புரி நிலையங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

# பொலிஸ் ரோந்து அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சிறிலங்கா பொலிசார் என்றுமில்லாதவாறு தமது வீதிச் சோதனை மற்றும் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர்.

குறிப்பாக யாழ்.நகரம், ப்ருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், மானிப்பாய், சுன்னாகம், நெல் லியடி, ஆனைக்கோட்டை போன்ற பகுதிகளில் பொலிசார் தமது நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியுள்ளனர்.

இதன் போது வீதியில் செல்லும் உந்துருளிகள், ஈருருளி வண்டிகள் மற்றும் வாகனங்கள் அனைத்தும் வழி மறிக்கப்பட்டு பரிசோதிக்கப்படுவதுடன் ஓட்டுனர்களின் உரிமங்களும், தலைக்கவச தற்காப்பு அணிகள் என்பனவும் சோதிக்கப்படுகின்றன.

(33)

# குடாநாட்டில் இன்று முதல் டெங்கு ஒழிப்பு வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாடெங்கிலும் டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை இவ்டெங்கு நோய் ஒழிப்பு வாரம் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார சேவையினரது ஏற்பாட்டில் கடைப்பிடிக்கப்படவுள்ள இவ்டெங்கு ஒழிப்புவிழிப்புணர்வு வாரத்தில் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளும், விழிப்புணர்வு நடவடிக்கைகளும் இடம் பெறுகின்றன.

(33)

# தானிய உணவு ஒவ்வாமை 56 பேர் வைத்தியசாலையில்

(திருமலை)

திருகோணமலை மாவட்டம் மூதூர் இறங்குதுறை வீதியிலுள்ள ஆழிப்பேரலை அகதிமுகா மொன்றில் நேற்று தானியவகையொன்றை உட்கொண்ட 56 பேர் மயக்கம் மற்றும் வாந்தியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த தானிய வகை உணவு வெளிநாட்டு தொண்டர் அமைப் பொன்றினால் நிவாரணமாக வழங் கப்பட்டது. அவித்துச் சாப்பிட வேண்டிய குறிப்பிட்ட தானிய உணவுவகையை, பதப்படுத்தாமல் உண்டமையினால் அதில் ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக இவர்கள் வாந்தியெடுத்து மயக்கம் அடைந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் ஏழு பேர் நேற்று மாலை வைத்தியசாலையிலிருந்து வெளியேறியுள்ளனர். ஏனையோர் வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## சந்திரிகா...

கொழும்பு நகரின் மையப் பகுதியில் இந்தப் பேரணி நடத்தப்படவுள்ளதுடன் இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் பெருமளவான உறுப்பினர்கள் கலந்து கொண்டு அரசாங்கத்திற்கு எதிரான தமது கண்டனக் கோசங்களை எழுப்பவுள்ளனர்.

இந்தப் பேரணியின் காரணமாக கொழும்பு நகரின் வழமையான செயற்பாடுகள் ஸ்தம்பிதமடையும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.(32)

## அமைச்சரவையில்...

செனவிரத்தன, சுசில் பிரேமஜயந்த ஆகிய அமைச்சர்களின் பொறுப்புகளில் இயங்கும் அமைச்சுகளிலும் மாற்றங்கள் செய்யப்போவதாக சனாதிபதி தெரிவித்துள்ளதாக சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

# பகிரங்க அறிவித்தல்

2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 32 ஆம், 33 ஆம் பிரிவுகளின் படி கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் அவர்களின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் நெற்கணியை மேட்டுக்காணியாக மாற்றுதல் தண்டனைக்குரிய குற்றமாகும். மறு அறிவித்தல் வரை வயற்காணியை மேட்டுக்காணியாக மாற்றுவதற்கான அனுமதி வழங்கல் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் அவர்களால் நிறுத்தப் பட்டுள்ளது. மீண்டும் அனுமதி கிடைக்கும் வரை வயற்காணியை மேட்டுக்காணியாக மாற்றும் செயற்பாட்டை நிறுத்துமாறு பொது மக்கள் வேண்டப்படுகின்றார்கள்.

மேலும் குளங்களை அண்மித்த நீர் ஏந்தும் பிரதேசங்களில் குடியிருப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. என்பததையும் உங்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

உதவி ஆணையாளர்,
கமநல அபிவிருத்தித்திணைக்களம்,
முல்லை மாவட்டம்.

(சி.11482)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது